[redacted]

# ரோஜா

[redacted]

இதழ். 19



நவம்பர் 1997

$1.50

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழகிய அச்சு வேலைகளின் அரங்கம்!

Since 1991

அச்சு வேலைகள் எதுவானாலும்
அதிக தரத்துடன் அளவான விலையில்
துரிதமாக பெற்றிட எம்மை நாடுங்கள்

# பரடைஸ்
## அச்சகம்

Graphic Designs
Instant &
Commercial Printing
Tel: (416) 288-6449
Fax:(416) 288-0595

1231 Ellesmere Road,
Suite 201, Scarborough
(Midland & Ellesmere)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜூலை 1993 இதழ். 19

ரோஜா

கலை இலக்கிய மாத மலர்

**November 1997**

அறையின் ஒரு சுவரில் *Patricia Ford* சிரித்துக்கொண்டிருக்க.... மேசையில் அமைதியாக ஒரு *IBM Aptiva* உட்கார்ந் திருந்தது. *Aptiva*வுக்கு அருகில் அவள்.... உதட்டோர மச்சம் தெரிகிற நெருக்கத்தில் இருந்தாள்.


- இளமைக் (கே)காலங்கள் - 06
  - கலைவாணி இராஜகுமாரன்


## ஒரு கல்லின் கதை


- அறிவியல் - 13
  - கருணா


ரவுண்ட் அப்

**"சிந்தனா சக்தியை இழக்கும் மாணவர்கள்"**

இன்று புற்று நோயாகிவரும் 'ரியூஷன்' பல புதிய தகவல்களுடன்...

- எஸ்ஸார்


- ரவுண்ட் அப் - 32






- ஒபரேஷன் ரொறன்ரோ - 48
  - MR. லிபரேஷன்

- ஓவியக் கவிதை - சக்கரவர்த்தி — 05
- இலக்கிய உறவுகள் — 06
  - வி. கந்தவனம்
- தமிழா வெகுண்டெழு - கவிதை — 12
  - மீனா செல்வரெட்ணம்
- அட்டைப்படத்தில்.... — 18
- Land of Darkness - கவிதை — 19
  - உமாநந்தினி இராஜேந்திரம்
- சுவடுகள் - கந்தையா நாவேந்தன் — 21
- மனம்விட்டு - எஸ். ராஜ்மோகன் — 22
- எட்வேட் மொங் - ஓவியம் — 23
- தண்ணீர் தண்ணீர் தண்ணீர் — 27
  - எஸ். சிவச்செல்வி
- இதயராகம் - ஆசிரியர் பேனா — 30
- சோ சோயா — 39


### எழுத்தாளர் அரும்பு


- அறிமுகம் ஒரு புதுமுகம் — 41
  - நவநீதன் சண்முகராஜா
- சொல்லுங்கள் கேட்கப்படும் — 42
- காதல் பற்றி Yongsters — 43

- வானொலி நிகழ்ச்சிகள் — 46
- நமது தீர்ப்பு - கவிதை — 47
  - நிர்மலன் பாலசிங்கம்
- 2000 நோக்கி - அமிர்தவர்ஷினி — 51
- CHIPS — 54

- alian Problem — 47
  - சிந்தியா




இவர் அண்மையில் 'கிளாமரா' கிரகத்திலிருந்து வந்தவர்!




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# ஸ்ரீ கௌரி மங்கள சேவை

அனைத்து இந்துமத கிரியைகளுக்கும்
கனடிய திருமணப் பதிவு அதிகாரி, இந்து மதகுரு

**சிவஸ்ரீ பஞ்சாட்சர விஜயகுமாரக் குருக்கள் (ஐயாமணி)**

(புங்குடுதீவு - 10)

(416) 266 3333



(416) 266 3333

அனைத்து இந்து மத கிரியைகளுக்கும், திருமணம் போன்ற மங்களகரமான வைபவங்களுக்கு வேண்டிய அனைத்து தேவைகளுக்கும்; குறைந்த வாடகையில் ஸ்காபுரோ, ரொறன்ரோ இடங்களில் மண்டப வசதிகளும் செய்து கொள்வதற்கும் எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள்.

கல்யாண மண்டபம், மணவறை, பந்தல் அலங்காரம், பூமாலை, ஆண்டாள் மாலை, சடைநாகம், தலைப்பாகை, பூஜைக்குரிய பொருட்கள் இவை அனைத்தையும் ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ளலாம்.


628 E Birchmount Road, Scarborough, ON. M1K 1P9





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எம் இதய நிலாவுக்கு சமர்ப்பணம்!




உதயம்: 22.06.1958
அஸ்தமனம்: 30.06.1997

உங்கள் பாதையில்
எங்கள் பாதங்கள்.......



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



The Screem
ஓவியம்: எட்வேட் மொங்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# @#!!@^**@#!~•@#

யாதென்றும் அறியா
உணர்வொன்றில்
அழுதே தொலைத்தேன்
அன்றைய பொழுதை,
வகுப்பறையில் பருவமடைந்த
சிறுமி போன்று

அன்றைய இரவெல்லாம்
ஒற்றை நாயின் ஊளையைத் தொடரும்
தொடர் ஊளைகளும்
பின்னெழுந்த எதிரொலிகளும்
இதன் உள்ளர்த்தம்
நெடுநேரமாய் மனப்படிமங்களில்

இந்தக் கணப்பொழுதில்
ஆயிரம் பேருக்கு மத்தியிலும்
தனிமை வந்தது,
ஒரு 'ஐம்புலன்ஸ்' வண்டிபோல.......

குழந்தையின் மரணம் போன்றும்
நூலகமொன்றின் அழிவைப்போன்றும்
என்னைப் பின்தொடரும்
துன்பியல் பேய்கள்
அமைதியாய் அமுக்கிப் போடும்
பிணியாகவோ அன்றி சாவாகவோ

இவைகளிடம் தப்பித்து
அடைக்கோழி இறக்கைக்குள்
பதுங்கிடல் வேண்டும்

தேடிமறைய முயலுகையில்
விளக்கணைந்த
நிலக்கீழ் அறைபோல் ஆனது மனது
இரத்தம் வறண்டு
கணப்பொழுதில் முதுமை படர்ந்து
விழி முழி வெளித்தள்ள
இறத்தலைப் போனானேன்

ஆதிர்க்கே ஒருத்தன்
தேன் குடித்தான்
கருகி பொசுங்கி
உதிர்ந்தன.......
ஆயிரம் தேனீக்கள்

• சக்கரவர்த்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலக்கிய உறவுகள்

• கவிஞர் வி. கந்தவனம்

## 13 இலக்கண வித்தகர் பண்டிதர் இ. நமசிவாயம்

பண்டிதர் இ. நமசிவாயம் அவர்கள் புறநானூறு கூறும் 'ஆன்று அவிந்து அடங்கிய கொள்கைச்' சான்றோர். அவரது புலமை அஃகி அகன்றது. அவரது உலகம் பகுத்தறிவு உலகம். அவரது சிந்தனை தனித்துவமானது.

அறிவு விசாரணையில் நான் அலைந்து திரிந்த காலத்தில் எனது சந்தேகங்களைத் தர்க்கரீதியாகத் தீர்த்து வைத்து என்னைத் தன்பக்கம் ஈர்த்தவர். இதனால் அவருடன் 'உவப்பத் தலைக்கூடி உள்ளப் பிரிதல்' ஆகிய உறவு அடிக்கடி தொடரலாயிற்று.

அடிக்கடி தொடர்வதற்கு வேறு பல காரணங்களும் இருந்தன. நான் குரும்பசிட்டி, அவர் கட்டுவன். அச்சுவேலி - தெல்லிப்பழை வீதியை மல்லாக வீதி தழுவும் இடம் கட்டுவன் சந்தி எனப்படும். அந்தச் சந்திக்கு அழகு செய்வது பண்டிதர் ஐயாவின் மாளிகை வீடு. அதற்கும் எனது வீட்டுக்கும் உள்ள இடைத்தூரத்தைக் கடப்பதற்கு எட்டு நிமிடத் துவிச்சக்கர வண்டி ஓட்டம் போதுமானது. சமூகப் பணிகள், ஆலோசனைச் சேவை, சொற்பொழிவுத் தொண்டு என்று இருவருமே நேரத்தோடு போராடுகின்றவர்களெனினும் சனி ஞாயிறுகளில் எப்படியாவது சந்தித்துக் கொள்வோம். அவர் வீமான் காமம் மகா வித்தியாலயத்தில் அதிபராக இருந்து ஓய்வு பெற்றதன்பின் சந்திப்புகளில் சிரமம் இருக்கவில்லை.

கண்டதும் முகமலர்ச்சியுடன் வெற்றிலைத் தட்டத்தை நீட்டுவார். எனக்கு வெற்றிலை போடும் பழக்கம் இல்லை. எனினும் அவர் நீட்டுவதை வாங்கவேண்டும் என்னும் மரியாதையில் வாங்கிக்கொண்டு இரண்டொரு பாக்குத்துண்டை எடுத்து வாயில் போட்டுக் கொள்வேன். அவர் வெற்றிலை போடுவது கண்களுக்கு விருந்தாக இருக்கும். வெற்றிலை போட்டபின் அவரது சிந்தனா சக்தி சிறகடிக்கத் தொடங்குவது போலத் தெரியும். அதனை உணர்ந்து கொண்டு நான் பேச்சை ஆரம்பிப்பேன்.

ஒருமுறை 'உண்மையே பேசி, ஒழுக்கத்தில் நின்று நேர்மையாக வாழ்பவர் பொதுவாக வாழ்க்கையில் கஷ்டப்படுவது ஏன்' என்று ஒரு கேள்வியைக் கேட்டேன். கேட்டு முடித்ததுதான் தாமதம் 'பள்ளிக் கூடத்திலே படிப்பவருக்குத் தான் பரீட்சை வைப்பது வழக்கம்' என்று பதில் அளித்து விட்டு வெற்றிலை வாயைக் குதப்பினார். கடவுள் தனது பள்ளிக்கூடத்தில் படிப்பவருக்கே சோதனை வைக்கிறார். சோதனை காலத்தில் நிதானம் தவறுகின்றவர் தாமாகவே கடவுளின் பள்ளிக்கூடத்தில் இருந்து விலகிக்கொள்கின்றனர்.

தொடர்ந்து தருமம், பாவ புண்ணிய விளைவுகள் பற்றி அன்று எனக்குக் கிடைத்த விருந்து இன்றும் சுவைத்துக் கொண்டே இருக்கின்றது.

ஒருவர் செய்யும் புண்ணியம் அவருக்கு மட்டுமல்லாது அவரது சந்ததிக்கும் நன்மை செய்யவல்லது. சந்ததிக்குச் சுவறும் புண்ணியம் சக்திவாய்ந்ததாக இருத்தல் வேண்டும். புண்ணியத்தின் சக்தியை விளக்க ஓர் உதாரணம் சொன்னார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓர் அறையில் இருந்துகொண்டு சங்கை மெதுவாக ஊதினால் நாதம் அந்த அறையில் மட்டும் கேட்கும். ஊன்றி ஊதினால் வீட்டிலுள்ள ஏனைய அறைகளுக்கும் கேட்கும். இன்னும் பலமாக ஊதினால் அயலட்டைகளுக்கும் கேட்கும். அதுபோலவே நாம் செய்யும் புண்ணியம் அளவைப் பொறுத்தே அதன் சக்தியும் இருக்கும். சிறிதளவு புண்ணியமாயின் ஒரு சந்ததியுடனேயே அதன் சக்தி தீர்ந்து விடும். சக்தி மிகுந்த புண்ணியமெனின் அடுத்த அடுத்த சந்ததிகளுக்கும் தொடரும்.

புண்ணியத்தின் சக்தியைப் பெருஞ்செல்வத்துக்கு ஒப்பிடலாம். ஒரு சந்ததியில் சேர்க்கும் பொருட்செல்வம் அடுத்த சந்ததிக்கும் பயன்பட வேண்டுமாயின் இரண்டு விடயங்களைச் செய்தல் வேண்டும். ஒன்று செல்வத்தைக் கண்டபடி செலவிடாது கட்டிக் காத்தல். இரண்டு, செலவிட்டால் அந்த அளவுக்கோ அதற்கு அதிகமாகவோ தொடர்ந்து செல்வத்தைத் தேடுதல்

பொருட் செல்வத்தைப் போலவே புண்ணியமாகிய செல்வத்தையும் கட்டிக் காத்தல் வேண்டும். பாவங்களைச் செய்வதனால் தேடிவைத்த புண்ணியம் செலவாக நேரிடும். தகாத முறையில் நடப்பவர்கள் நல்ல வாழ்க்கை வாழ்வதற்குக் காரணம் அவர்களது முன்னோர் திரட்டிவைத்த புண்ணியமாகும். புண்ணியம் செலவாகிய பின் தீவினை செயற்படத் தொடங்கும் நல்ல செய்கைகளின் விளைவே புண்ணியம். அதனால் புண்ணியத்தைத் திரட்ட வேண்டுமாயின் நல்லனவற்றைத் தொடர்ந்து செய்தல் வேண்டும்

தொல்காப்பியத்துக்குப் பொருள் கண்ட வித்துவான் கணேசையா அவர்களின் தலை மாணாக்கர் பண்டிதர் நமசிவாயம் அவர்கள், இலக்கண அறிவில் ஈடுஇணையற்று விளங்குபவர். இதனை நன்கு உணர்ந்து பிற்காலத்தில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் 'இலக்கண வித்தகர்' என்னும் பட்டத்தை அளித்து ஐயா அவர்களை கௌரவித்தது.

**காலத்தினால் தொன்மையான 'ஒல்காப் பெரும்புகழ்த் தொல்காப்பியம்' பெருமை வாய்ந்த பேரிலக்கண நூலாகவல்லாது, பழந்தமிழர் நாகரிகத்தின் கருவூலமாகவும் அமைகின்றது.**

இத்தகைய வித்தகரிடம் ஏறத்தாழ ஒருவருட காலமாகத் தொல்காப்பியம் பொருள் அதிகாரத்தை நண்பர்கள் புலவர் பார்வதிநாதசிவம், உமாமகேஸ்வரன், ஆ. சிவநேசச் செல்வன், மயிலங்கூடலூர் பி. நடராசன் ஆகியோருடன் சேர்ந்து கற்கக் கிடைத்த வாய்ப்பைப் பெரும் பேறாகவே கருதிவருகிறேன்.

காலத்தினால் தொன்மையான 'ஒல்காப் பெரும்புகழ்த் தொல்காப்பியம்' பெருமை வாய்ந்த பேரிலக்கண நூலாகவல்லாது, பழந்தமிழர் நாகரிகத்தின் கருவூலமாகவும் அமைகின்றது. பழந்தமிழர் வாழ்க்கை முறையை வகுத்துக் கூறுவது பொருளதிகாரம். பொருளதிகாரத்தை அரிதின் முயன்று தேடிப்பெற்று முதன்முதலாகப் பதிப்பித்த பெருமை ஈழத்து ராவ்பகதூர் சி. வை. தாமோதரம்பிள்ளை அவர்களைச் சாரும். தமிழர் பண்பாட்டையும் பாரம்பரியத்தையும் முறையாக அறியவிரும்புவோர் தொல்காப்பியத்தைத் தவறாது கற்றல் வேண்டும் என்பது பண்டிதர் ஐயா அவர்களின் கருத்தாக இருந்தது.

பண்டிதர்ஐயா அவர்கள் ஒரு பிறவி ஆசிரியர். எந்தக் கடும் பொருளையும் மிக எளிதாக்கி விளக்குவதில் வல்லவர். அவரது சொற்பொழிவுகளிலும் ஆசிரியத் தன்மை அதிகம் இருக்கும். அவர் தலைமை தாங்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சூரியோதயம்
ஒவ்வொருநாளும் புதிது
புதிதாகத்
தோன்றுகிறது.
மாலை அடி வானக்
காட்சிகளும் அவ்வாறே.
பூமரங்கள் தினமும்
புதுப்புதுப் பூக்களைத்
தருவ தில்லையா?**

பட்டிமன்றங்களில் நாம் மிகுந்த அவதானத்துடன் பேசுவோம். அவர் கருத்துரைகளைக் கவனமாகக் கேட்போம். அவற்றில் நாம் கேட்டிராத புதுமைக் கருத்துக்கள் நிறையவே இருக்கும்.

பெரும் அறிவுக் களஞ்சியமாக விளங்கும் ஐயா அவர்கள் அதிகம் எழுதுவதில்லை. யாராவது கவிதையோ கட்டுரையோ கேட்டால் எழுதிக் கொடுப்பார். அவரது சிந்தனைகள் நிலைபெறவேண்டும் என்னும் பெருநோக்குடன் 'நீங்கள் ஏதாவது நூல் செய்ய வேண்டும்' என்றேன் ஒருநாள். வழக்கமான புன்முறுவலுடன் பதில் வந்தது; 'தமிழில் எல்லாம் இருக்கிறது. புதிதாக எழுத என்ன இருக்கிறது?'

சூரியோதயம் ஒவ்வொருநாளும் புதிது புதிதாகத் தோன்றுகிறது. மாலை அடி வானக் காட்சிகளும் அவ்வாறே. பூமரங்கள் தினமும் புதுப்புதுப் பூக்களைத் தருவ தில்லையா? அவ்விதம் ஏதாவது ஆக்க வேண்டியதுதானே என்று நினைத்தேனே தவிர அவரிடம் எதையும் கூறவில்லை. கூறியிருந்தால் அவர், 'பூக்கள் காலையில் பூத்து மாலையில் வாடுவன, தமிழில் உள்ளவை என்றுமே வாடாத பூக்கள்' என்று ஏதாவது பதில் சொல்லியிருப்பார். அவரின் விளக்கங்கள் தர்க்கரீதியானவை; கேட்பவருக்கு மனநிறைவை ஏற்படுத்தக் கூடியவை.

இருப்பினும் நான் விடவில்லை.

ஐயா அவர்கள் அசல் முருக பக்தன். கந்தசட்டி விரத காலத்தில் தமது இல்லத்தில் முருகப் பெருமானுக்கு விசேட பூசை செய்து கந்தசட்டி கவசத்தை தவறாது நெடுங்காலமாகவே ஓதி வருபவர். ஒருமுறை பூசை முடிவில் தமது கடைசி மகளைக் கந்தசட்டி கவசத்தை ஓதும்படி பணித்தார். மகள் புத்தகத்தை விரிதிதுப் படித்துச் செல்கையில்.....

**வரும்பகல் தன்னில் வச்சிரவேல் காக்க
அரையிருள் தன்னில் அனையவேல் காக்க
ஏமத்தில் சாமத்தில் எதிர்வேல் காக்க
தாமதம் நீங்கிச் சதுர்வேல் காக்க
காக்க காக்க கனகவேல் காக்க
நோக்க நோக்க....**

என்ற இடத்தில் வந்ததும் தொடராது நிறுத்திக்கொண்டார். பூசை அறையில் படு அமைதி. மகள் அமைதியை வியப் போசையால் கலைத்தாள்.

'அப்பா'
'ஓம்...'
'புத்தகத்தில் வேல் தெரிகிறது!'

எப்பொழுதோ நடந்த இச் சம்பவத்தை ஐயா அவர்கள் மிகுந்த பயபக்தியுடன் சொன்னதைக் கேட்டபோது உடம்பெல்லாம் புல்லரித்தது.

'முருகனைப் பற்றி நீங்கள் ஒரு நூலாக்க வேண்டும்' என்றேன். மிகக் குறுகிய காலத்துள் 'சந்நிதிச் சதகம்' என்னும் நூலைப் பாடிமுடித்தார். செல்வச் சந்நிதி முருகன் தகுதி வாய்ந்த புலவனைக் கொண்டு பாடல் செய்வித்ததையிட்டு எனக்கு உள்ளார்ந்த மகிழ்ச்சி. நூலின் வெளியீட்டு விழா எனது தலைமையில் கட்டுவனில் நடைபெற்றது. ஞானோதய வித்தியாசாலை அதிபர். திரு. சி. நாகலிங்கம் அவர்கள் தலைமையிலான குழு ஒன்று விழா ஒழுங்குகளைச் சிறப்புறச் செய்திருந்தது.

அதிபர் நாகலிங்கம் அவர்கள் ஒப்பற்ற ஒழுக்கசீலர். பயனிலைசொல்லாத பண்பாளர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்டிதர் ஐயாவுடன் பல பொதுப்பணி களில் ஈடுபட்டு உழைப்பவர். அவர்மீது பெருமதிப்பு வைத்திருப்பவர். பண்டிதர் ஐயாவுக்கு சமாதான நீதவான் பதவியை அரசாங்கம் வழங்கியபோது பெரும் பாராட்டுவிழா ஒன்றையும் அவருக்கு நடத்திய பெருமை அதிபர் அவர்களைச் சாரும்.

பாராட்டுவிழா பேராசிரியர் சு. வித்தியானந்தன் அவர்களின் தலைமையில் நடைபெற்றது. பேராசிரியர் ஐயாவை நன்கு அறிந்தவர். ஐயா நெடுங்காலமாக ஆசிரியராகவும் பிற்காலத்தில் அதிபராகவும் பணிபுரிந்த வீமன்காமம் மகா வித்தியாலயம், அரசாங்கம் பாடசாலைகளைப் பொறுப் பேற்பதற்குமுன், சு. வி. யின் முகாமையி லிருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

ஐயா அவர்கள் பட்டம் பதவிகளை விரும்பாதவர். ஆனால், அவற்றைத் தேடி அலைபவர்களால் சங்கம் சபைகளில் ஏற்படும் போட்டி பூசல்களைத் தீர்த்து, சமாதானங்களை அவர் நிலைநாட்டிய சம்பவங்கள் ஏராளம். 'சமாதான நீதவான்' பட்டம் வருவதற்கு எவ்வளவோ காலத் துக்கு முன்பிருந்தே மக்கள் அவரை நீதவானாகக் கருதி அவர் தீர்ப்புகளுக்கு மதிப்பளித்து வந்திருக்கிறார்கள். அதற்கு முக்கிய காரணம் சமன் செய்து சீர்தூக்கும் அவரது திறமை. நீதி நியாயங்களைக் கண்டறியும் புத்திக் கூர்மை. பாரபட்சங் களைச் சுட்டெரிக்கும் நேர்மை. அவரது அறம் மனத்துக்கண் மாசிலனாய அறம்.

இத்தகைய சான்றோரின் பார்வை என்மீது விழுந்ததும் அவரே எனது ஞானகுரு வானதும் யான் செய்த தவப் பயன்.

*தெளிவு குருவின் திருமேனி காண்டல்*
*தெளிவு குருவின் திருநாமம் செப்பல்*
*தெளிவு குருவின் திருவார்த்தை கேட்டல்*
*தெளிவு குருவுருச் சிந்தித்தல் தானே.*

திருமந்திரம்





# DR. PUSHPA

DENTIST



SERVICES

- Cosmetic
- Crown (cap)
- Bridges
- Dentures
- Filling
- Gum Treatment
- Rootcanal
- Surgery

டாக்டர் (Mrs) புஷ்பராணி கரன் வன்னித்தம்பி

பல் வைத்தியத்துறையில் எட்டு வருட அனுபவம் வாய்ந்தவர்

MAIN DANFORTH DENTAL CLINIC

2558 Danforth Ave., Suite 206, Toronto, ON M4C 1L3

Tel: (416) 693-9202

# இளமைக் (கோ)காலங்கள்

"அடிச்சுப்போட்டாங்கள்" வெகுசிரத்தையாகக் காற்சட்டைக்குள் கால்களை நுழைத்தபடி கூறினான் அரவிந்தன்.

ஆர்......?

"கிரி....... அவன்ரை Friends"

"நீர் சும்மா போக கூப்பிட்டு அடிச்சவங்களோ..." எனக்குத் தெரியும்.. மேலே ஏதோ சொல்லப் போனவனை அலுப்போடு கைநீட்டித் தடுத்து "போதும்" என்றான் அரவிந்தன்.

நீட்டிய கையை பட்டெனத் தட்டிவிட்டு "அப்பாட்டைச் சொல்லுறன்..." என்றவனை முறைத்தபடி சொன்னான்.

"நானும் சொல்லுறன்"



"என்ன சொல்லப் போறாய்...? எரிச்ச லோடு கேட்டான் அருண்.

அவனுடைய கேள்வியோடு இணைந்து கேட்டது கதவு தட்டும் ஓசை.

அருண் சட்டென அரவிந்தன், அவனு டைய காயம்... அவனுடைய எச்சரிக்கை எல்லாம் மறந்துபோய் பரபரத்தான்.

சுகி.... அந்த இரண்டெழுத்துக்கு அத்தனை ஞாபகங்களையும் கலைத்துப் போடுகிற சக்தி இருந்தது.

கட்டிலில் உட்கார்ந்திருந்த அரவிந்தனை ஓரம் கட்டி, கண்ணாடியைப் பார்த்து ஏற்கனவே வாரப்பட்டிருந்த தலையைக் கலைத்து மறுபடி கலைத்து மறுபடி வாரி. இலேசாக 'ஜெல்' பூசிக்கொண்டு வெளியே வருவதற்கிடையில் அவர்கள் உள்நுழைந்து உட்கார்ந்து விட்டிருந்தார்கள்.

வழியில் அம்மா ஏராளமான Jacketகளுடனும் hangerகளுடனும் போராடிக் கொண்டிருந்தாள். அம்மாவின் தலைக்கு மேலால் எட்டிப் பார்க்க ராமச்சந்திரன் மாமா தெரிந்தார். அவருடைய வலதுகை ஒரு மயிர்க்கற்றையால் முன் வழுக்கையை மறைக்க வெகுவாகப் பிரயத்தனம் செய்து கொண்டிருந்தது.

அதற்கப்பால் வசந்தா மாமி பிரியாக் குட்டியிடம் வழக்கமான அந்தப் புளித்துப் போன கேள்வியை இரண்டாவது தடவையாகக் கேட்டுக் கொண்டிருந்தாள்.

"பிள்ளைக்கு அப்பாவிலை விருப்பமா.... அம்மாவிலை விருப்பமா...?"

பிரியா Cartoonஇலிருந்து கண்ணை எடுத்து "என்ன இது அசட்டுத்தனமாய் ஒரு கேள்வி...." என்பதாய் ஒரு பார்வை

• கலைவாணி இராஜகுமாரன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்த்துவிட்டுச் சொன்னது, "இரண்டு பேரிலையும்..."

வசந்தா மாமிக்குப் பக்கத்தில் சுகி எதற்கோ சிரித்தபடி தெரிந்தாள். சுரிதாரா, பாவாடை மேல்சட்டையா என்று பிரித்தறியமுடியாத சிக்கலான ஒரு ஆடையில் வெகு அழகாக இருந்தாள். இளஞ் சிவப்பு ஆடைக்குப் பொருத்தமாய் ரோஜா வண்ண 'லிப்ஸ்ரிக்'.... ஈரமாய் மினுமினுத்தது. அவள் அருணைப் பார்த்து "ஹாய்" என்று சிரித்தபோது கன்னத்துக்குழி கிறங்க அடித்தது.

"பெண்ணே....!
உன் கன்னக் குழியில்
புதைந்தவர்கள்
எத்தனைபேர்....?

"வாவ்....! எனக்குக் கூட கவிதை வருகிறதே....!" அருண் தனக்குள் வியந்து கொண்டான்.

"ஒருநாள் எல்லாவற்றையும் சொல்லி விட வேண்டும். அவளுக்காகவே பள்ளிக்கூடம் மாறியதை, அவளுக்காகவே நண்பர்களுடன் சுற்றுவதைக் குறைத்ததை, அவளைக் கவரவே படிப்பில் கவனம் செலுத்துவதை, அவளுக்காகவே காத்திருப்பதை.....

ஹாய்...! சுகியைப் பார்த்துக் கூவியபடி வந்த அரவிந்தனைப் பார்த்ததும் இலேசான பொறாமை ஏற்பட்டது.

"எவ்வளவு இயல்பாய்.. எவ்வளவு துடிப்பாய் இருக்கிறான்... இவனை எந்தப் பெண்ணும் விரும்புவாள்...!

"யூ நோ சம்திங்....." கதிரையைத் திருப்பிப் போட்டபடி ஆங்கிலத்தில் ஆரம்பித்தான் அரவிந்த்.

அவன் எப்போதும் அப்படித்தான்...! தலையில் தொப்பியானாலும் நாற்காலியானாலும் திருப்பிப் போட்டுத்தான் பழக்கம்...!

அப்பாவும் ராமச்சந்திர மாமாவும் அரசியலுக்குத் தாவி விட்டிருந்தனர்.

**அந்தப் பொய் அருணுக்குப் பிடித்திருந்தது. அவளை அறைக்குள் அழைத்துக் கொண்டு போனபோது அரவிந்தனின் முகத்தில் ஏமாற்றம் தெரிந்தது.**

இனிச் சாப்பிட மேசைக்கு வருகிறவரை Subject மாறப்போவதில்லை. வசந்தா மாமிக்கு Sale இல் வாங்கிய சமையல் பாத்திரங்களைப் பற்றி அம்மா விரிவுரை நிகழ்த்திக் கொண்டிருந்தாள். பிரியா POWER RANGERS cassetteஐ இருபத்தியோராவது தடவையாக போட்டு சோபாவை உதைத்துக் கொண்டிருந்தது.

அருண் தனியே நின்றான்.

அரவிந்தன் ஆங்கிலத்தில் அநாயாசமாக முழங்கிக் கொண்டிருந்தான்.

சுகி என்னை விடுவியேன்! என்றபடி அருணைப் பார்த்தாள்.... பின் ஏதோ நினைத்துக் கொண்டவளாக.... "எக்ஸ்கியூஸ் மீ" என்றபடி எழுந்து....
"அருண் P. Cயில் புதுசா ஏதோ program வந்திருக்கிறதா சொன்னாய் பார்க்கலாமா...?"

அப்பட்டமான பொய்...!

ஆனால் அந்தப் பொய் அருணுக்குப் பிடித்திருந்தது. அவளை அறைக்குள் அழைத்துக் கொண்டு போனபோது அரவிந்தனின் முகத்தில் ஏமாற்றம் தெரிந்தது.

அறையின் ஒரு சுவரில் Patricia Ford சிரித்துக்கொண்டிருக்க.... மேசையில் அமைதியாக ஒரு IBM Aptiva உட்கார்ந்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருந்தது. திரையில் Screen Saver, Laser ஜாலங்கள் காட்டிக்கொண்டிருந்தது.

Aptivaவுக்கு அருகில அவள் உதட்டோர மச்சம் தெரிகிற நெருக்கத்தில் இருந்தாள்.

ஏன் பொய் சொன்னீர்...? அருண் வியப் போடு கேட்டான்.

அவள் வெகு அழகாக சிரித்துவிட்டுச் சொன்னாள்
"அவன் தன்னைப் பற்றியே கதைச்சுக் கொண்டிருக்கிறான்.....!"

அருண் திடீரென துணிவு வந்து பிடரியில் உந்தக் கூறினான் "நான் அப்பிடியில்லை சுகி....!"

"அப்ப எப்பிடி...?" அவள் விஷமத்தன மாகக் கண்களைச் சிமிட்டியபடி கேட்டாள்.

"உமக்குப் பிடிச்சமாதிரி விஷயங்களைக் கதைப்பன்.....!"

"ஏன்....? நான் அப்பிடி என்ன special.....?"

"சொல்லிவிடு....!" அருணின் மூளைக்குள் அந்தக் குரல் ஒலித்தது.

(தொடரும்)

# தமிழா வெகுண்டெழு!...

இது விடியலை நோக்கிய பயணம்!
ஏன் உன் மனதில் சலனம்!
சொல்லிக் கொண்டா வரும் மரணம்!
புறப்படு இதுதான் தருணம்!

தோல்விகள் வரலாம் சளைக்காதே - உன்
தோள்களின் வலிமை இழக்காதே!
அஞ்சினால் பாதை திறக்காதே!
நெஞ்சில் உரமுண்டு கலங்காதே!

மடமை எண்ணம் களைந்து விடு!
அடிமை விலங்கை உடைத்து எழு!
பழமை பேசித் திரிதல் விடு - பாயும்
புலியாய் வெகுண்டு எழு!



கதவுகள் உனக்காய்த் திறக்கிறதே!
கனவுகள் யாவும் பலிக்கிறதே!
துணிந்தெழு துயர்கள் விலகிடுமே!
எழுந்திரு தமிழா தாமதமேன்?

• சிறீ செல்வரட்ணம்

• கருணா



# ஒரு கல்லின் கதை

“யாருமற்ற ஒரு வீதியில் காரில் சென்று கொண்டிருக்கிறீர்கள். கும்மிருட்டு; மின்னல் பளிச்சிடுகிறது; மழைத்தூறல் வேறு; திடீரென விநோதமான ஒரு உருவம்..... வண்டியை நிறுத்துகிறது! தான் செவ்வாய்க் கிரக வாசியென்று தன்னை அறிமுகம் செய்கிறது.”

சாதாரண பார்வைக்கு வெறும்கல்.... ஆனால் இன்று இந்தக்கல் அறிவியல் உலகத்தை ஆட்டிப் படைத்திருக்கிறது. ஆச்சரியத்துக் குரிய பல தகவல்களை இந்தக் கல் தந்திருக்கிறது.


“யாருமற்ற ஒரு வீதியில் காரில் சென்று கொண்டிருக்கிறீர்கள். கும்மிருட்டு. மின்னல் பளிச்சிடுகிறது. மழைத்தூறல் வேறு. திடீரென விநோதமான ஒரு உருவம் வண்டியை நிறுத்துகிறது. தான் செவ்வாய்க் கிரக வாசியென்று தன்னை அறிமுகம் செய்கிறது.” இப்படி யாராவது சொன்னால் ....What.....செவ்வாயிலாவது.... உயிரினமாவது.... செமஜோக் என்று நீங்கள் சிரிக்காதீர்கள். உங்கள் எண்ணம் தவறாயிருக்கலாம். ஒரு கல் உங்கள் கருத்தையெல்லாம் தலைகீழாக மாற்றி இருக்கிறது.

நிறை: 1.9 Kg<br>
வடிவம்: உருளைக்கிழங்கை ஒத்த சாதாரண கல்லின் வடிவம்<br>
நிறம்: மெல்லிய கறுப்பு

இதுதான் அந்தக்கல். சாதாரண பார்வைக்கு வெறும்கல்..... ஆனால் இன்று இந்தக்கல் அறிவியல் உலகத்தை ஆட்டிப் படைத்திருக்கிறது. ஆச்சரியத்துக்குரிய பல தகவல்களை இந்தக் கல் தந்திருக்கிறது. இந்தக்கல்லின் விலை இன்று மதிப்பிடமுடியாத அளவுக்கு உயர்ந்துவிட்டது. அப்படி என்னதான் இருக்கிறது இந்தக்கல்லில்? அதை அறிந்து கொள்ள நாம் சற்றுப்பின் நோக்கிப் போகவேண்டும். அதற்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


தொலைகாட்டியூடாக செவ்வாய்

முதல்........
செவ்வாய்க் கிரகத்திற்குச் செல்வோம். (குனித்த புருவமும் கொவ்வைச் செவ்வாயில் குமிழ் சிரிப்பும்....... அதுவேறு செவ்வாய்) சூரியனிலிருந்து செவ்வாய் நான்காவதாகக் காணப் படும் கிரகம். தொலை நோக்கியினூடாகப் பார்க்கும் போது இது செந்நிற வடிவில் காணப் படும். செவ்வாய்க்கு ரோமானியர்கள் தமது வீரத்திற்கான தெய்வத் தின் நினைவாக "Mars" எனப் பெயரிட்டிருந்தனர். விண்வெளிக்கு மனிதன் கலங்களை அனுப்பும் காலம் வரை செவ்வாயில் உயிரினங்கள் வாழுவ தாகவே பலரும் நம்பினர். சாதாரணமாக தொலை நோக்கிகளால் செவ்வாயைப் பார்க்கும் போது கால்வாய் வடிவிலுள்ள பல அமைப்புக்களை காணக் கூடியதாக இருந்தது. எனவே செவ்வாயிலுள்ள மனிதர்கள் (உயிரினங்கள்) நீர்ப் பாசனத்தில் மிகவும் முன்னேறியிருந்த தாகவும் அதனாலேயே கால்வாய்கள், அணைக்கட்டுகளை பாரியஅளவில் அமைத் திருந்ததாகவும் நம்பப்பட்டது. செவ்வாயின் சிலபகுதிகளில் தெரிந்த மலைகள் மனித முகத்தின் வடிவமாகத் தெரிந்தது. இது அவர்களின் கலை வெளிப்பாடெனவே நம்பப்பட்டது.

***1965ம் ஆண்டு Mariner 4 என்ற விண் கலம் முதன்முதலாக செவ்வாய்க்கு அண்மையாக அனுப்பப்பட்டது.***

அந்தக் காலப்பகுதியில் வெளிவந்த திரைப்படங்களில் கூட செவ்வாய்க்கிரக வாசிகள் பறக்கும்தட்டில் வந்து பூமியை ஆக்கிரமிப்பது போன்ற காட்சிகள் அதிக அளவில் காண்பிக்கப்பட்டன. பல ஆண்டு களாக செவ்வாய்கிரகத்தில் உயிரினங்கள் வசிப்பது ஐயமில்லாமலே நம்பப்பட்டது.

1965ம் ஆண்டு Mariner 4 என்ற விண் கலம் முதல்முதல் செவ்வாய்க்கு அண்மை யாக அனுப்பப்பட்டது. இக்கலம் செவ்வாய்க் கிரகத்திற்கு மிக அண்மையில்சென்று பல படங்களை எடுத்து அனுப்பியது. இந்தப் படங்களிலிருந்து கால்வாய் போன்ற அமைப்புக்கள் தாமாகவே தோன்றியவை என்றும் கண்ணுக்குப் புலப்படும் அளவில் எந்த உயிரினமும் அங்கிருக்கவில்லை எனவும் தெரியவந்தது.


1976ம் ஆண்டு Viking என்ற விண்கலம் செவ்வாயில் தரையிறங்கி செவ்வாயின் மேற்பரப்பிலுள்ள மண்ணை பூமிக்குக் கொண்டுவந்தது. அப்போது கூட எதிர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்த்ததற்கு மாறான சில கனியங்கள் இருக்கக் காணப்பட்டனவேயன்றி உயிரினம் எதுவும் வாழ்வதற்கான அறிகுறியெதுவும் தென்படவில்லை. இப்போ அண்மையில் கூட Pathfinder வாகனம் செவ்வாயில் இறங்கியது பற்றிக் கேள்விப்பட்டிருப்பீர்கள் (எங்கே ஐயா கல்லைக் காணோம்.....)

இனி சற்று பின்நோக்கிச் செல்வோம். சர்ச்சைக்குரிய (ஆரம்பத்தில் கூறப்பட்ட) இக்கல் ஏறக்குறைய 4.5 பில்லியன் வருடங்களுக்கு முன் தோன்றியிருக்கலாம் என்கிறார்கள். 3.6 பில்லியன் வருடங்களுக்கு முன் செவ்வாயில் நீர் அல்லது நீரை ஒத்த திரவம் ஒன்று இருந்ததாக நம்பப்படுகிறது. அப்போது இக்கல்லின் மேற்பரப்பு நீருடன் தொடுகையில் இருந்திருக்கலாம் எனக்கூறப்படுகிறது. 16 மில்லியன்



......ஆட்டிப்படைத்த கல்

வருடங்களுக்கு முன்னர் வால்வெள்ளியொன்று செவ்வாயில் மோதிய போது ஏற்பட்ட தாக்கத்தில் இக்கல் செவ்வாயின் ஈர்ப்பு விசைக்கு வெளியே தள்ளப்பட்டது. நீண்ட காலம் விண்வெளியில் அலைந்து கொண்டிருந்த இக்கல் 13,000 ஆண்டுகளுக்கு முன்னர் அன்டாட்டிக்காவில் Allan Hills Ice Field பகுதியில் ஒரு விண்கல்லாக விழுந்தது.


13,000 ஆண்டுகள் பனிப்படைகளால் மூடப்பட்டு குளிர்வடைந்திருந்த இக்கல் 1984இல் விண்கற்களை துருவப்பிரதேசங்களில் ஆய்ந்துகொண்டிருந்த குழுவினரால் கண்டுபிடிக்கப்பட்டு Johnson Space Center's Meteroite Processing Laboratory (Houston, Texas)இல் ஆய்வுக்காகக் கொணரப்பட்டது. 1993 ம் ஆண்டு Viking விண்கலம் செவ்வாயில் எடுத்த மண் வகையுடன் ஒப்பீடு செய்தும் இன்னும் ஏனைய வழிகளிலும் இது செவ்வாய்க் கிரகத்தைச் சேர்ந்த கல் என விஞ்ஞானிகள் கண்டுகொண்டனர். இதைத் தொடர்ந்து இக்கல் ALH84001 எனப் பெயரிடப்பட்டு தீவிர ஆய்வுக்குள்ளாக்கப்பட்டது.

இதுவரையில் எல்லாமாக 12 செவ்வாயைச் சேர்ந்த கற்கள் பூமியில் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. இவற்றில் மிகவும் பழமையானது மேற்கண்ட கல்லாகும். இது ஏறக்குறைய 4.5 பில்லியன் வருடங்கள் பழமையானது. அது சரி..... எவ்வாறு சாதாரண ஒரு கல்லை விண்வெளியிலிருந்து வந்தது எனக் கண்டறிகிறார்கள்? எப்படி இந்தக் கிரகத்துக்குத் தான் சொந்தமானது எனக் கண்டறிகிறார்கள்? ஒரு கல்லைப் பரிசோதனை செய்து அதில் பூமிக்குத் தொடர்பற்ற பல கனியங்கள் இருக்கும் பட்சத்தில் அது பூமியைச் சேர்ந்ததல்ல என முடிவெடுக்கப்படுகிறது. கற்களுக்குள்ளே அகப்பட்டிருக்கும் வாயுக்களின் அமைப்பை வைத்து அது எந்தக் கிரகத் தொகுதிக்குச் சொந்தமானது எனமுடிவு செய்கிறார்கள்.

இந்தக் கல்லின் கார்பனேற் படிமங்களை ஆய்ந்தபோதே பூதம் கிளம்பியது. நுண்ணங்கிகள் வாழ்ந்திருக்கலாம் என்ற எண்ணம் அப்போதே உண்டானது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கல்லில் காணப்பட்ட பற்றீரியா போன்ற அமைப்பு

பூமியில் முதலில் தோன்றிய உயிரினம் பக்டீரியா என்பது சிலரின் வாதம். பாறைகளிலுள்ள சிலவகைக் கனியங்களை வைத்தே பூமியில் முதலில் தோன்றிய உயிரினத்தைப் பற்றி விஞ்ஞானிகள் கண்டறிந்துள்ளார்கள். செவ்வாய் கிரகக் கல்லில் காணப்படும் சேதன இரசாயன மூலக்கூறுகளும் இந்த காபனேற் வலையங்களில் இணைந்திருக்கக் காணப்பட்டது.

(சற்று நேரம் உங்கள் மூளையை விஞ்ஞான மொழியில் குழப்பப் போகிறேன்.... குழம்ப விரும்பாதவர்கள் அடுத்த பந்திக்கு செல்லலாம்) Stanfordஐச் சேர்ந்த விஞ்ஞானிகள் குழுவொன்று Laser mass spectrometer என்ற உபகரணத்தின் உதவியுடன் Polycyclic Aromatic hydrocarbons (பல் இணைப்புள்ள மணம்வீசும் ஐதரோகாபன்) என அழைக்கப்படும் இவ்விரசாயன மூலக்கூறுகள் அமைந்துள்ள விதத்தை வரைபாக்கினர். JSC யில் இச்சிறிய துணிக்கைகள் கொண்டுள்ள கனியங்களை இலத்திரன் நுணுக்குக் காட்டியால் ஆராய்ந்தபோது இரண்டு உலோகங்கள் இணைந்துள்ளது அறியப் பட்டுள்ளது. ஒன்று மக்னிற்றைற் எனப் படும் இரும்பு ஒட்சைட் மற்றயது இரும்பு சல்பைட். இரசாயனத் தாக்கங்கள்மூலம் மிகத்தூய்மையாகத் தயாரிக்கும்போது வெவ்வேறு சந்தர்ப்பங்களிலேயே இவை யிரண்டும் தோன்றும் வாய்ப்புள்ளது எனினும் பூமியில் இவையிரண்டும் பக்டீரி யாக்களால் ஒன்றாக வீழ்படியப்படும் சந்தர்ப்பங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. பூமியிலுள்ள பாறைகளில் காணப்படும் நுண்ணிய (nano) பக்டீரியாக்களின் உருவமைப்பு மேற்கூறப்பட்ட காபனேற் சிறுதுணிக்கைகளின் உருவை ஒத்திருப்பது முற்கால உயிரினங்களைப் பற்றிய ஒரு கண்ணுக்கு புலப்படும் சான்றாகிறது. எனவே செவ்வாயில் உயிரினம் ஏறுக் குறைய 3.5 பில்லியன் வருடங்களுக்கு முன்னர் வாழ்ந்திருக்க வேண்டும்.

இதைத் தொடர்ந்து 1996 ஓகஸ்ட் 7ம் திகதி nasa அதிகாரபூர்வமாக மேற்கண்ட கண்டுபிடிப்பை வெளியிட்டது. JSCயின் விண்வெளி விஞ்ஞானியும் ஆய்வுக்குத் தலமைதாங்கியவருமான David McKay இதற்கான அறிவிப்பை வெளியிட்டார். nasa இப்போது செவ்வாய்க்கு அனுப்பி யிருக்கும் விண்கலங்களுடன் இது தொடர் பான ஆய்வுகள் தொடரப்படும் என எதிர் பார்க்கலாம். எனினும் இந்தக் கண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிடிப்பில் பல தெளிவற்ற நிலைப் பாடுகள் இருக்கின்றன. கல் 16 மில்லியன் வருடங் களுக்கு செவ்வாயிலிருந்து வெளியேறி யிருக்கிறது. 13000 வருடங்களுக்கு முன்னர் கல் பூமியில் விழுந்திருக்கிறது. கல் செவ்வாயிலிருந்துதான் வந்ததா அல்லது செவ்வாயை ஒத்த வேறேதாவது கிரகத்தி லிருந்து வந்ததா என்பது கேள்விக்குரிய விடயமே. சில ஆய்வாளர்கள் இந்த விடயத்தில் சந்தேகம் தெரிவித் திருப்ப துடன் இக் கண்டுபிடிப்பு முடிவானதொன் றல்ல என்றும் கூறியிருக்கின்றனர். எனினும் நாசா பில்லியன் வருடங்களுக்கு முன்னர் செவ்வாயில் உயிரினம் இருந்திருக்க வேண்டும் என்ற தகவலை அதிகார பூர்வமாகவே வெளியிட்டிருக்கிறது.

எனவே இனி இருளில் வெளியே செல்லும் போது எதிரில் வருபவர்களை கவனமாகப் பாருங்கள்.........; செவ்வாய்க் கிரக மனிதனாகக்கூட இருக்கலாம்?


********

## அடுத்த இதழில்.....

1983க்கு முன்னர் கனடாவில் தமிழர். உங்கள் அனுபவங்கள் ஆக்கங்களாகட்டும்.

அனுப்பவேண்டிய தொலைநகல் இலக்கம் (416) 425-2625.

*"77இலோ..... 78இலோ மறந்து போச்சு. ஹமில்டன்ல தமிழ்படம் காட்டினாங்க. ரொம்ப நாள் முன்னாடியே பிளான் பண்ணி இங்கிருந்து ஹமில்டன் போனோம். அப்புறம்தான் பார்த்தா 500, 600 km அங்கிட்டெல்லாம் இருந்து படம் பார்க்க வந்திருக்காங்கன்னு தெரிஞ்சது. படம் முடிய 500 கிலோமீட்டரும் படத்தைப்பத்தி சண்டை பிடிச்சுண்டே போனாங்க."*


SRI SIVA
JEWELLERY

721 Bloor St. W. , Toronto, ON.
Tel: (416) 531-4867




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*வளர்ந்துவரும் பாடகி*

# உமாநந்தினி இராஜேந்திரம்




கனடாவில் அண்மையில் வெளிவந்த இசைத் தட்டுகளில் இவரது பெயரை அடிக்கடி பார்த்திருப்பீர்கள். 14 வயதிலேயே மேடை யேறிய இவர் இன்று பல ரசிகர்களிடையே தனக்கென ஒரு இடத்தைப் பெற்றிருக்கிறார். ஆரம்ப காலத்தில் கோணேஸ் ஓர்க்கெஸ்ராவின் இசைக் குழுவில் அங்கம் வகித்த இவர் இதுவரை சுமார் 30 மேடை நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டுள்ளார்.

கர்நாடக சங்கீதத்தை தனது மாமனார் சங்கீத பூஷணம் பொன். சுந்தரலிங்கம் அவர்களிடம் முறையே பயின்றுவருகிறார். நவராகங்கள் ஒலி ஒளி நாடாவில் "உயிரே... உயிரே" பாடல் இவரை ரசிகர்களுக்கு அடையாளம் காட்டியது. கடந்த வருடம் மார்கழி மாதம் சுவிற்சர்லாந்தில் இடம்பெற்ற மூன்று இசை நிகழ்ச்சிகளில் கலந்து கொண் டதை பெருமையுடன் கூறுகிறார். கனடா, ஜேர்மனி சுவிற்சர்லாந்து கலைஞர்கள் கலந்து கொண்ட இந் நிகழ்வில் இவருக்கு "புங்கைநகர் தந்த பூங்குயில்" என்ற பட்டம் வழங்கப்பட்து.

இவர் செப்டெம்பர் மாதம்முதல் பல்கலைக் கழகம் செல்கிறார். சுற்றாடல் தொடர்பான துறையில் பட்டம்பெற்ற பின்னர் இலங்கை சென்று நிரந் தரமாகத் தங்கவேண்டும் என்று சிரித்துக் கொண்டே கூறினார். இவைதவிர விளையாட்டுத் துறையிலும் இவர் பிரகாசித்து வருவது குறிப்பிடத் தக்கது. சிறந்த ஓட்ட வீராங்கனைக்காக கிடைத்த பல விருதுகளைக் காட்டிய போது...... வாவ்....... That much!

ரசனை ஆளுக்காள் வேறுபடும். எல்லாத் தரப்பட்ட ரசிகர்களையும் திருப்திப்படுத்த வேண்டும் என்பதில் மிகுந்த அக்கறை காட்டுவதாக கூறுகிறார். ம்..... பிழைத்துக் கொள்வார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# Land of Darkness

I awake up in the morning
Not because its time to get up;
But, because of the noise of bombs.
And people crying loud in pain,
Loosing the loudness And I wonder
Why does it happen in my country?

I can't sleep in the night
even though I want to
Because when I does my eyes
I see blood flowing like a river.
In that, I see people laying dead,
flooding like logs, when I wonder
why does it happen in my country.

This is not a daydream,
This is not a nightmare,
This is real,
I feel horrible about myself,
For I have done Nothing to save my country.

Then I wonder why should
This happen in any country.

*Uma Nanthini*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீபாவளி
பண்டிகையை
முன்னிட்டு
6 குமார்ஸ்
சில்க் கவுஸ்
ஸ்தாபனத்தாரின்
புதிய
அறிமுகங்கள்



**1வது தீபாவளி புதிய வெளியீடுகள்**

கோலம், றங்கோலி, அபூர்வா, வரிசையில்
கோமதியின் "அனுராகா"

- அனுராகாவின் Golden Tissue சாறிகள்
- அனுராகாவின் Centre Brocade சாறிகள்
- அனுராகாவின் Turning Border சாறிகள்

**2வது தீபாவளி புதிய வெளியீடுகள்**

கோலம், றங்கோலி, அபூர்வா, வரிசையில்
தேவதாவின் "அஞ்சலி"

- தேவதாவின் Golden Tissue சாறிகள்
- தேவதாவின் 2 Dimension சாறிகள்
- தேவதாவின் 3 Dimension சாறிகள்
- தேவதாவின் Benten Border சாறிகள்
- தேவதாவின் விசேட தயாரிப்பு
Supreame Golden Tissue சாறிகள்

**3வது தீபாவளி புதிய வெளியீடுகள்**

அபூர்வா காஞ்சியின் "புதிய வார்ப்புகள்"

- காஞ்சியின் Temple Border சாறிகள்
(Gold & copper வேலைப்பாட்டுடன்
1½ MTS Brocade Blouse ps உடன்)
- காஞ்சியின் இரண்டு Blouse உடன் கூடிய சாறிகள்

இன்னும் பல புதிய வெளியீடுகள்!
அனைத்தும் இப்பொழுது
மலிவு விலையில்...!

**6 Kumars**
Silk House

1394 Gerrard St.E
416-465-7131

# சுவடுகள்

## காலம்

என் இதயம் என்னும் பறவை எப்போதெல்லாம் இளைப்பாற நினைக்கின்றதோ அப்போதெல்லாம் ஒரு மரத்தைத் தேர்ந்தெடுக்கின்றது. அந்த மரம் வேறு எதுவுமில்லை என் பழைய வாழ்க்கைதான். இயந்திரமான இந்த வாழ்க்கையை விட்டு சுதந்திரமான அந்த மரத்தைச் சுற்றியே அது பறந்து கொண்டிருக்கின்றது.

என் தாய் நாட்டின் நினைவுகளை மீட்டெடுப்பதில் அப்படியோரு இனம்புரியாத சுகம்.

என் மனத்திரையில் தடுக்கப்பட்டு வைத்திருக்கும் அந்த நாட்கள் விடுதலை பெற்ற சந்தோஷத்தில் விபரிக்கப்படும் போதெல்லாம் கண்கள் குளமாக் கப்படுவதுமுண்டு. கனாக்களில் நானே தொலைந்த நாட்களுமுண்டு.

நான் திரும்பிப் பார்க்கும் இந்த வாழ்க்கை என்னை விட்டு வெகுதூரம் சென்றுவிட்டது. நான் விட்டுச் சென்றதை நினைத்து பெருமூச்சு விடவே முடிகின்றது. திரும்பிப் போக முடியவில்லையே.......

ஓ..... காலமே எத்தனை மாற்றங்கள் உன்னில் உளது, வேகத்துடன் என்னால் ஓட முடியவில்லையே..........

இப்போது மறுபக்கம் ஓட அல்லவா ஆசைப்படுகிறேன். வாழ்க்கை என்பது மடியிலிருந்து கறந்த பாலாகிவிட்டதே. ஆனால் என் இதயத்தால் மட்டும் எப்படி அது சாத்தியமாகின்றது? மனம் எனும் இறக்கைகளை இணைத்துக் கொண்டு அது அங்கேயே உலவுகின்றதே.......

இதயமே உனக்கு எனது நன்றிகள். என் இளமை நினைவுகளை மீண்டும் மீண்டும் நீ சந்தித்துக் கொள்வதால்.

அதோ தொலை தூரத்தில் தெரியும் எனது ஆரம்பப் பள்ளி ஆசிரியரின் சேலைத் தாவணி. எத்தனை தடவைகள் அதனைப் பிடித்துக் கொண்டு துள்ளி இருப்பேன்.

இப்போதும் என் நெஞ்சில் பசுமையாய்த் தெரியும் ஏன் பாடசாலை நாட்கள் அதில் ஓடித் திரிந்த கால்கள் பறந்து திரிந்த சக பறவைகள்.

நீரை அடைகாத்து ஆற்றிலே குதித்த குளித்த அந்த நாட்கள்.

காற்றிலே பறக்க விட்ட காகிதப் பட்டங்கள் கல்வி பயில்வதற்காய் கைகள் பல சைக்கிள் கையுடன் கோர்த்துச் சென்ற தனியார் வகுப்புகள்.

காட்சிகள் பார்ப்பதற்காய் கவலையேயின்றிச் சென்ற கிராமத்து கோயில் திருவிழா. கற்6-பனையைத் தட்டிவிட்டு கண்களால் கதைகள் பேசி சட்டென்று தோன்றி மறையும் அந்த சாளரமுகம்.

இன்பத்திலும் துன்பத்திலும் இணைபிரியாது என் மனதிற்கு மருந்து தடவிய அந்த நட்பின் கரங்கள்

திரும்பிய திசையெல்லாம் தீந்தமிழ் பேசி தித்திக்கவைத்த அந்த தீஞ்சுவை மனிதர்கள்.

இவைபோல் இன்னும் எத்தனை எத்தனை ஒவ்வொரு நாளும் இரவும் பகலும் வருகின்றது. அது எப்படி எனக்கு மட்டும் இரவாகவே இருக்கின்றது.

இப்போது எனக்கு விளங்கிவிட்டது நான் வாழ்வது போல் வாழ்கின்றேன்.

உதடுகள் ஒட்டாமலே உச்சரிக்கிறேன்;
கனவுகள் இல்லாமலேயே காதலிக்கின்றேன்;
கண்ணீர் இல்லமலேயே அழுகின்றேன்;

முதல் நாளின் நினைவுகளின்றியே அடுத்த நாளின் பொழுது புலர்கின்றது.

காலமே நீ என்னைக் கடந்து..... நீண்ட தூரம்தான் சென்று விட்டாய்......

• கந்தையா நாகேந்திரன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 7. விசிற்றிங்....!

அன்று ஞாயிறு........
அது அவர்களுக்கு ஓய்வு நாள்........
சினிமா செல்வதற்குத் தயாராகிக்
கொண்டிருக்கிறார்கள்......
திடீரென டக்..டக்...டக்....கதவு
தட்டப்படுகிறது......
திறந்தபோது...... "நீங்களா"
வியக்கிறார்கள்!
அவர்களது அத்தனை கற்பனைகளும்
சிதறுண்டன.....

ஒவ்வொருவரும் ஓய்வுநாட்களில் தமக்கென்று பல திட்டங்களை வைத்திருப்பார்கள். சிலர் Parkக்குப் போவதாக..... சிலர் கோவிலுக்கு செல்வதாக...... சிலர் வீட்டில் மனைவி, குழந்தைகளுடன் தனியாகக் கழிப்பதாக.... சிலர் தொலைக்காட்சியில் ஒரு Programஐ பார்ப்பதாக..... இருப்பார்கள்.

இந்த நிலையில் எதுவித அறிவிப்புமின்றி ஒருவர் வந்து கதவைத் தட்டினால்..... எப்படி இருக்கும்?

அது மட்டுமா வந்தவர் சும்மாவும்இருக்க மாட்டார் "இந்தப் பக்கமாப் போறம்..... அதுதான் உங்களையும் சும்மா பாத்திட்டுப் போவம் எண்டு........"

இந்த அநாகரிகமான செயல் அக்குடும்பத்தின் அங்கத்தவர் அனைவரையும் பாதித்துவிடும். உங்களை மனதினுள் திட்டோதிட்டென்று திட்டுவார்கள். (சிலர் தேனீரை மேசையில்வைக்கும் வேகத்தில்கூட கோபத்தைக் காட்டுவார்கள்.)

அப்படியிருந்தும்....... ஊஹு"ம்....
அறுத்துக் கொண்டேயிருப்பார்கள்.

உண்மையில் ஒரு வீட்டுக்கு முன்அறிவிப்பு எதுவுமின்றி விசிட் பண்ணக்கூடாது. அது அம்மா வீடாகவோ அக்கா வீடாகவோ இருக்கலாம். முன்னரேயே இதுபற்றி தெரியப்படுத்த முயற்சியுங்கள். முன்னர் என்பது 5 நிமிடங்களுக்கு முன் என்பதல்ல. உதாரணமாக மாலையில் ஒரு வீட்டுக்கு விசிட் பண்ணுவதாக வைத்துக் கொள்வோம். என்ன செய்யலாம்..... காலையில் அது பற்றி அழைத்துக் கூறுங்கள். (Telephone னை இதற்கு உபயோகியுங்கள். (?)) அத்துடன் அவர்களது மாலை நேரத்திட்டம் பற்றி முதலில் கேளுங்கள். நீங்கள் அங்கு செல்லவிருக்கும்நேரம் பற்றியும் செலவிடவிருக்கும்நேரம் பற்றியும் தெரிவியுங்கள். முடிவை அவர்களிடமே விட்டுவிடுங்கள்.

இந்த நாகரிகமானசெயல் உங்களைப் பற்றிய ஒரு உயர்ந்த அபிப்பிராயத்தை ஏற்படுத்திவிடும். அத்துடன் உங்களது வருகைக்கு ஏற்றால்போல் அவர்கள் தம்மை தயார்படுத்தி வைத்திருப்பார்கள். (தேனீருக்கு பால் முடிந்துவிட்டது போன்ற அசௌகரியங்கள்.... கூட கிடைக்காது). எப்போதுமே உங்கள்நாளைத் திட்டமிட்டு செயல்படுங்கள்.

எங்கே.... நாளைக்கு விசிட்பண்ணும் வீட்டின் தொலைபேசி இலக்கத்தை அழுத்துங்களேன்......

• ஈஸ். ராஜமோகன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சில மாதங்களின் முன் ரொறன்ரோ Downtownஇற்கூடாகப் போகும்போது அல்லது ஆங்கிலப் பத்திரிகைகளில் அடிக்கடி ஒரு படத்தை (ஓவியம்) நீங்கள் கண்டிருக்கலாம். எமது சஞ்சிகையிலும் இதே ஓவியத்தை நீங்கள் கண்டிருக்கலாம். இந்த ஓவியத்திற்கு திடீரென என்ன நடந்தது? இந்த ஓவியம் ஏன் எல்லா இடங்களையும் ஆக்கிரமிக்கிறது? அந்த ஓவியம் ஓவியக்கண்காட்சிக்காக ரொறன்ரோவுக்கு வந்திருந்தது. இந்தப் படம் பிரபல நோர்வே ஓவியர் எட்வேட் மொங்கால் வரையப்பட்டது. எட.வேட் மொங் 20ம் நூற்றாண்டின் புதிய ஓவியக் கொள்கைகளில் ஒன்றான வெளிப்பாட்டு வாதத்தின் ஆரம்ப கர்த்தாக்களில் ஒருவர் எனக்கொள்ளப்படுகிறார்.

19ம் நூற்றாண்டில் புகைப்படக்கருவி பாவனைக்கு வந்த காலங்களில் ஓவியம் தொடர்பான புதிய சிந்தனைகள் ஐரோப்பாவில் ஏற்படத்தொடங்கின. அதுவரையில் ஓவியர்கள் பின்பற்றிய மரபு முறைஓவியம் போதாது என்பது பல ஓவியர்களின் கருத்தாயிருந்தது. இதைத் தொடர்ந்து மனப்பதிவு வாதக் (impressionism) கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன. மனப் பதிவு வாதமென்பது ஒரு காட்சியை வரையும்போது பார்த்தபடியே அக்காட்சியை வரையாது அது ஓவியனுடைய மனதில் ஏற்படுத்தும் தாக்கத்தை அல்லது பதிவை வரைவதாயிருந்தது. ஒரு கடற்கரைக் காட்சியை ஓவியமாக்கும்போது மனப்பதிவு வாதிகளின் ஓவியத்தில் கடற்கரை இல்லாது போகலாம்.இவர்கள் வரைகின்ற முறை மரபு ஓவியத்தினின்றும் வேறுபட்டதேயன்றி ஓவியக்கருவைப் பொறுத்தவரை இவர்கள் புராணக் கதைகளையும், சமயக் கதைகளையுமே மூலமாகக் கொண்டிருந்தனர்.

மனப்பதிவுவாதத்தினைப் பின்பற்றிய முக்கிய ஓவியர்களாக மோனே, பிசாரோ, வான்கோ முதலானோரைக் கொள்ளலாம். 1874ம் ஆண்டு மனப்பதிவுவாதிகள் தமது முதலாவது ஓவியக் கண்காட்சியை பாரிசில் நடாத்தினர். அந்நாட்களில் பெரும் சர்ச்சைக்குரிய விடயங்களில் ஒன்றாக இது திகழ்ந்தது.

இக்காலப் பகுதிக்கு சற்றுப்பின்னர் வெளிப்

பாட்டுவாதக் (Expressionism) கருத் துக்கள் முன்வைக்கப்பட்டன. வெளிப் பாட்டு வாதமென்பது வெறும்மனப்பதிவை வரையாது அதைப்புதியதொரு தோற்றத்தில் வரைதல் அல்லது புதியதொரு உள்ளக் கிடக்கையை வெளிக்கொணருதல் என்ப தாகும். அக்காலப்பகுதியில் ஏற்பட்ட விஞ்ஞானக் கண்டுபிடிப்புகளுடன் ஓவியத்தின் கரு தொடர்பான எண்ணங்களும் முற்றி லும் மாற்றமடைந்தன. வர்ணத் தெரிவும் மாற்றமடைந்தது. கடுமை தெறிக்கும் வர்ணங்களைப் பயன்படுத்த வெளிப்பாட்டு வாதிகள் தலைப்பட்டனர். இவர்களின் ஓவியங்களில் ஒவொரு வர்ணங்களுக்கும் ஒவ்வொரு குணாதிசயங்களைக் காண முடிந்தது. ஒரு மனிதனின் புற உருவத் தோற்றத்தை வரைகையிலும் வெறும் தோற்றத்திற்கு முக்கியத்துவம் கொடுக் காது குணாதிசயங்களுடன் வரைந்தனர். உதாரணமாக நோய்வாய்ப்பட்ட மனிதன், காதல் வயப்பட்ட மனிதன். இவ்வகையான கருத்துக்கள் முன்வைக்கப்பட்ட காலப் பகுதியிலேயே எட்வேட் மொங் ஓவிய உலகில் நுழைந்தார்.

எட்வேட் மொங் 1863இல் நோர்வேயி லுள்ள ஒஸ்லோவில் (Christiania) வில் பிறந்தார். இராணுவ வைத்தியராக விருந்த மொங்கின் தந்தையார் பிரபல வரலாற்றாசிரியரான P.A. Munch இன் சகோதரர். மொங்கின் தாயார் மொங் ஐந்து வயதாயிருக்கையிலேயும் அவருடைய சகோதரி சிறிது காலத்திற்குப்பின்னரும் இறந்து போனார்கள். மொங் சிறுவயதில் அடிக்கடி நோய்வாய்ப் படுபவராயிருந்தார். அவருடைய இளைய சகோதரிக்கு மன வியாதியிருந்தாய்க் கூறுகிறார்கள். நோய், இறப்பு தொடர்பான அவரது பதிவு அவரு டைய பிற்கால ஓவியங்களில் அடிக்கடி தோன்றியது. அவர் வரைந்த பலமனித முகங்களில் வேதனை, நோயால் ஏற்பட்ட விகாரம், வியர்வை படிந்த முகத்தோற்றம், சோகத்தின் ஒரு சாயல் போன்றவற்றைக் காணமுடிந்தது.

நோர்வேயிலுள்ள Royal School of Drawingஇல் தனது ஓவியக் கல்வியை



எட்வேட் மொங்


ஆரம்பித்த மொங் அக்கால பிரபல ஓவியரான Christian Krohgஇன் மாண வரானார். அவரது ஆரம்ப ஓவியங்கள் யாவும் மரபுவாதத்தன்மை கொண்ட தாகவே இருந்தன. 1885இல் பாரிசுக்கு சென்ற மொங் தனது வித்தியாசமான முதலாவது படைப்பான "The Sick Child"ஐ வரைந்தார். இந்த படைப்பு அவரது சகோதரியைப் பற்றியதாயிருக் கலாம் எனக் கருதப்படுகிறது.

1889 இல் மொங் பாரிய கண்காட்சி யொன்றை Christiania வில் நடாத் தினார். அதைத் தொடர்ந்து நோர்வே அரசிடமிருந்து ஓவியக் கல்விக்கான உதவிப்பணத்தைப்பெற்றுக் கொண்டு பாரிசுக்கு வந்தார். அந்தச் சமயத்தில் மரபை மீறும் தன்மையொன்று கலை முயற்சிகளில் அறிமுகப்படுத்தப்பட்டுக் கொண்டிருந்தது. இத்தன்மை எட்வேட் மொங்கினிடையேயும் தாக்கமொன்றை ஏற்படுத்தியது எனலாம்.

மொங் பிராண்சுக்கு வந்த சிறிது காலத்தில் அவருடைய தந்தை இறந்துபோனார். இதைத் தொடர்ந்து ஏற்பட்ட தனிமை அவரை 'Night" (1890) என்ற ஓவியத்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



death in a sickroom

வரையத்தூண்டியது. இதைத் தொடர்ந்து 1891 இல் Christiniaவில் ஓவியக் கண்காட்சியொன்றை அவர் நடத்திய தாகவும் அறியமுடிகிறது. சிறிதுசிறிதாக அவரது ஓவியங்கள் ஓரளவு அங்கீகாரம் பெறத்தொடங்கி அவரது புகழ் எங்கும் பரவத் தொடங்கியது.

இந்தக்காலப் பகுதியிலேயே மொங்கை உலகுக்கு இனங்காட்டிய "Screem" என்ற ஓவியம் வரையப்பட்டது. பாலம் ஒன்றைக் கடக்கும்போது மொங்குக்கு ஏற்பட்ட இனந்தெரியாத பயமே இந்த ஓவியத்தின் வெளிப்பாடெனக் கருதப்படுகிறது. ஓவியத்திலுள்ள மனிதமுகத்தின் உணர்ச் சியை கவனிக்க.

1892 இல் ஓவியக்கண்காட்சியொன்றை நடத்துவதற்காக Germanyக்கு பேர்லின் ஓவிய சங்கத்தால் அழைக்கப்பட்டார்.45 மரபை மீறிய ஓவியங்களைக் கொண்ட இந்தக் கண்காட்சி பேர்லினில் பல விவாதங்களை உருவாக்கியது. ஓவியர் களிடையே பலத்த வரவேற்பைப்பெற்றுக் கொண்ட இந்த ஓவிய முறை விரைவி லேயே ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒன்றானது. தொடர்ந்து ஐரோப்பாவின் நட்சத்திரங் களில் ஒன்றாக அவர் கருதப்பட்டார்.

அதைத்தொடர்ந்த 16 வருடங்கள் அவர் ஓவிய உலகத்தில் முக்கியதொரு அடை யாளமாகக் கருதப்பட்டார். இந்தக் காலப் பகுதியில் அவர் வரைந்த "The Cry" பிரபலமானது. 1910 இற்குப்பின்னர் அவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நோர்வே சென்று அங்கேயே நிரந்தரமாய் தங்கினார்.

மொங்கின் ஓவியங்களில் காணப்படும் அடித்த பிரகாசமான வர்ணங்கள் அவர் வாழ்ந்த காலத்தில் ஒரு ஆச்சரியமாகவே நோக்கப்பட்டன. இறுதிக்காலத்தில சில ஓவியங்களை ஒஸ்லோ பல்கலைக்கழகக் கழகத்திற்காயும் வரைந்தார் எனக்கூறப் படுகிறது. இறுதியாக 1944இல் அவர் மரணமடைந்தார். நவீன ஓவியத்தின் அறிமுகப்பகுதியில் முக்கிய பங்காற்றிய எட்வேட் மொங்கின் ஓவியக் கண்காட்சி பெப்ரவரியில் ரொறன்ரோவில் நடை பெற்றது.

***உங்களிடமிருந்து தரமான சிறுகதைகள், நகைச்சுவை போன்ற ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றன.***

**Fax: 416-425-2625**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தண்ணீர் தண்ணீர் தண்ணீர்

பா லச்சந்தர் இயக்கிய திரைப்படத்திற்கு ஒரு விமர்சனம் என்று நினைத் திருப்பீர்கள். அப்படித்தானே. அந்த விமர்சனத்தை வாசிப்பதால் ஒருகொஞ்ச நேர சந்தோசம் அதை விட முக்கிய மானது, நீண்டநாள் சந்தோசம் தருவது ஆரோக்கியமானது இந்த....... விடயம். தண்ணீர், தண்ணீர், தண்ணீர்.

மனித வாழ்க்கைக்கு, எமது உடல் ஆரோக்கியத்திற்கு மிக மிக அத்தியாவசி யமானது நீர். எமது உடலில் 70% - 80% வரை நீரால் ஆக்கப்பட்டுள்ளது. உடற் கழிவுகளை அகற்றவும், உடல் வெப்ப நிலையைச் சீராக்கவும், எமது உடலைப் பல வித நோய்களிலிருந்து பாதுகாக்கவும் நீர் பயன்படுகிறது.

தினமும் எட்டு கிளாஸ் தண்ணீர் அருந்து வது உடல் ஆரோக்கியத்திற்கு உகந்தது என நாம் அறிவோம். நாம் அருந்தும் இந்த நீர் சுத்தமான, தூய நீராக இருத்-தல் மிகமுக்கியம். நாங்கள் நம்பி அருந்-தும் குழாய் நீர் தூய்மையானது தானா என எப்போதாவது நாம் சிந்தித்ததுண்டா? ஏதோ குடிக்க வேண்டும் என்பதற்காகக் குடிக்கின்றோம். எவ்வளவு பெரிய தவறு.

நாம் உபயோகப்படுத்தும் நீர் ஒன்ராரியோ வாவியிலிருந்து எமக்கு விநியோகிக் கப்படுகிறது..... அந்த வாவியிலிருந்து நீர் வருகிறது சரி, அங்கு என்ன என்ன போகின்றது என்பது எம்மில் எத்தனை பேருக்குததான் தெரியும்?....

ம்.........

எமது உடற்கழிவுகள், குழியலறைக் கழிவு நீர், தொழிற்சாலைக் கழிவுகள், கால் நடை, விவசாயக்கழிவுகள் இப்படிப் பல ஒன்ராரியோ வாவியினுள் தள்ளப்படுகின்றன. அதே, அதே நீர் தான் அத்தனை கழிவு களையும் கொண்ட நீர் தான் குளோரி னேற்றம் செய்யப்பட்டு எமக்கு விநியோகிக் கப்படுகின்றது. நாம் அருந்தும் இந்த நீரில் ஒரு சில கழிவுகளே அழிக்கப்பட்டு வருகின்றது. மிகவும் தரமான வடிகட்டல் முறைகளைப் பயன்படுத்தி சகலருக்கும் நீர் வழங்குவது என்பது அதிக செல-வானது. எமது அரசால் ஈடுகொடுக்க முடியாதது.

நாம் அருந்தும் குழாய் நீர் என்ன வித மான தீய காரணிகளைக் கொண்டுள்ளது என்பதையும், அவை மூலம் ஏற்படும் தீய விளைவுகளையும் பார்ப்போமா?.. எல்லா வற்றையும் ஆராய்வதென்றால் ஒரு புத்த கமே எழுதிவிடலாம். ஒரு சிலவற்றைப் பார்ப்போம்.

**ஈயம்** (Lead):

*எமது உடலுக்கு அத்தியாவசிய மற்ற பொருள் இந்த ஈயம். இது உடன டியாக எம்மைப் பாதிப்பதில்லை. ஆனால் உடலில் சிறுகச் சிறுகச் சேர்ந்து சிறுநீர கங்கள், செங்குருதிச் சிறுதுணிக்கைகள் என்பவற்றைச் சேதப்படுத்துகின்றது. பெரும் பாலும் சிறுவர்களின் மூளை வளர்ச்சி யைப் பாதிக்கின்றது. சிறுவர்கள் உளரீதி யாகவும் உடல்ரீதியாகவும் பாதிக்கப் படுவார்கள்.*

Protozoan Parasites:

*இவை நீரிலே வாழும் நுண்ணு யிர்கள். விலங்குகளின் கழிவுகள் மூலமா கத்தான் இந்த நுண்ணுயிர் நீரை அடைந்து பலவித பாதிப்புக்களை ஏற்படுத்துகின்றது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Trihalo Methanes (THMs)

எழுபது சதவீதத்திற்கு அதிகமான கனடிய மக்கள் குளோரினேற்றம் செய்யப் பட்ட நீரைத்தான் அருந்துகிறார்கள். நீரிற்கு ஒரு வித வித்தியாசமான சுவை யையும் விரும்பத்தகாத மணத்தையும் அளிக்கிறது குளோரின். குளோரினைப் பயன்படுத்தி நீரைச் சுத்திகரிப்பினும் குளோரின் உருவாக்கும் *Trihalo Methanes (THMs)* எனப்படும் பக்கவிளைபொருள், புற்றுநோயை உருவாக்குவதில் முக்கிய பங்கு வகிக்கின்றது. குளோரினேற்றம் செய்யப்பட்ட நீர் மூலம் ஒவ்வொரு வருடமும் ஒன்ராரியோ மாநிலத்தில் 140 மரணங்கள் சம்பவிப்பதாகத் தகவல்கள் கூறுகின்றன.

Radon (ரேடன்):

ரேடன் என்பது காற்றிலும் நீரிலும் இருக்கும் ஒரு மணமற்ற சுவையற்ற வாயு *(gas)* ஆகும். நிலத்திற்கு கீழ் உள்ள பாறைகள் மூலமாக இந்த நீரை அடை கின்றது. ரேடனின் தாக்கத்தால் நுரை-யீரல் புற்றுநோய், வயிற்றுப் புற்றுநோய் என்பன ஏற்படுகின்றது.

Nitrate (நைற்றேற்)

விவசாய, கால்நடைக் கழிவுகளில் இருந்து இது நீரை அடைகிறது. குழந்-தைகள், பெரியவர்கள், கர்ப்பிணிகணிகள் உடலில் இது நைற்றைற்ராக *(Nitrote)* மாற்றப்பட்டு ஒட்சிசன் காவியான ஈமோ குளோபினை ஒட்சிசன் காவமுடியாதபடி மெதோ குளோபினாக மாற்றுவதால் மூளைப் பாதிப்பையும் இறப்பையும் இது ஏற்படுத்துகிறது.

இங்கு குறிப்பிட்டவை ஒருசில காரணிகளே. இவ்வளவு அபாயகரமான காரணிகள் நாம் அருந்தும் நீரில் இருக்கின்றது என்று தெரிந்ததும் நீர் அருந்தவே பயம் வரும். வேண்டாத நோயெல்லாம் வருகின்றதே என ஒருவகை அச்சம் எம்மைத் தொற்றிக் கொள்ளுகிறது அல்லவா....

எமது உடலுக்கு நீர் மிக மிக அவசியம். அது தூய நீராக இருப்பது மிக மிக மிக அவசியம். நமது தாய் நாட்டில் நாம் பெறுவது சுத்தமான நீர். அந்த நீரையே நாம் கொதிக்க வைத்துத்தான் அருந்து வோம். "கெட்ட கிருமிகள் நீருள் கிடப்ப-தால் சுட்டாறிய நீரே சுகத்துக்கு உரியது", என்பார்கள். ஆனால் இங்கு நாம் நீரைக் கொதிக்க வைப்பினும் ஒரு சில பக்டீரியாக்கள் (bacteria), வைரஸ்கள் (viruses) மாத்திரமே அழிக்கப்படுகின்றன. ஆனாலும் முற்றுமுழுதாக சில சேதன (organic) காரணிகள் குறைக்கப்படமாட்டாது.

ஈயத்திலிருந்து சிறிதளவாவது விடுதலை பெற, குழாயைத் திறந்த மாத்திரத்தி லேயே அந்த நீரைப் பாவிக்கலாகாது. சிறிது நேரம் நீரை ஓடிவிட்ட பின்னரே உபயோகிக்கவேண்டும். பெரும்பாலும் குளிர்ந்த நீரையே சமையலுக்குப் பயன் யடுத்த வேண்டும்.

இப்போது பலர் போத்தல்களில் அடைத்து விற்கப்படும் நீரைத்தான் குடிப்பதற்குப் பயன்படுத்துகின்றனர். அவற்றில் கூட சாதாரண குழாய் நீரை அடைத்துப் போலிகள் தயாரிக்கப்படுவதாக நம்பப் படுகிறது. போத்தல்களில் அடைத்து விற்கப் படும் நீர் அதிக செலவானது. அத்துடன் போத்தல்களை அகற்றுவது போன்ற வற்றில் பல சிரமங்கள் ஏற்படுகின்றது.

எல்லாவற்றையும் விட தரமான, ஆனால் கொஞ்சம் செலவு அதிகமான சிறந்த வழி நீர் சுத்திகரிக்கும் கருவி (water filter) வாங்கிப் பொருத்துவதே ஆகும். ஒவ் வொரு தடவை போத்தல்களில் அடைக் கப்பட்ட நீரை வாங்குவதை விடவும் நீர் சுத்திகரிக்கும் கருவி லாபகரமானது. எவ்வளவு நீரையும் நமது விருப்பம் போல பயன்படுத்தலாம்.

அதிக நாட்கள் வாழவேண்டும் என்று யாருக்குத்தான் ஆசையிருக்காது. தெரி யாமல் செய்தால் அது தவறு தெரிந்தே செய்தால் தப்பு. இனியும் நாம் தப்பு செய்யலாமா?.....

• ஜாய். சிவச்செல்வி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜுலை 1993 இதழ். 19

ரோஜா

கலை இலக்கிய மாத மலர்

நவம்பர் 1997

கௌரவ ஆசிரியர்:
• வி. எல். ஆனந்த்

உதவி ஆசிரியர்கள்:
• கலைவாணி இராஜகுமாரன்
• எஸ். ராஜ்மோகன்
• எல். அனுஷியா

பிரசுரம்/விளம்பரம்:
• தமிழ் கிரியேட்டஸ் - கனடா

அச்சமைப்பு/வடிவமைப்பு:
• எல். கிரிஷோத் ரைப்செட்டிங்

அட்டை வடிவமைப்பு:
• தமிழ் கிரியேட்டஸ் - கனடா
• டிஜி கிறாபிக்ஸ் & ஸ்ரூடியோஸ்

படப்பிடிப்பு/ஓவியம்:
• கருணா - கிரியேட்டிவ் போட்டோ

அட்டை அச்சடிப்பு:
• விவேகா அச்சகம்

அச்சடிப்பு:
• பரடைஸ் அச்சகம்

விநியோகம்:
• சோதி




# இதயராகம்

## விழித்...

காரணங்கள்.... பல இருக்கலாம்!
ஆனால் பகிர்வதற்கு இது
நேரமில்லை....!

'ரோஜா' இதழ்...,
கண்கள் காத்திருக்க பூத்ததுவே?....

இதன் காரணத்தை தேடவில்லை....

மனிதத்தை தேடுகின்றோம்!

'ரோஜா' மலர்ந்த முதல்நாள் முதல்
எம்மோடு கைகோர்த்துவந்த நிலா.....
தொலைதூரம் சென்றபோது - பல
அனுபவங்களை இவர் இழப்பு
கற்றுத்தந்தது.

அதில் ஒன்று இதுவென்று - நாம்
கூற விளைகின்றோம்
'குழு' சேர்ப்பு கனடாவில்
குறோதத்தை வளர்த்தவேளை - எங்கும்
நிலா ஒளிவீசி
நியாயத்தை எடுத்துரைத்தார்.

அந்த வழி தொடர்வதுவே - இனி
எம் கடனாகும்.

நண்பராய் இருந்தவரும்
'குழு' ஒன்றில் புதைந்ததனால்
நட்பை மறந்த நாளின்று...

நிலா... கூறும் மனிதம் எங்கே?

மனிதம்... மனிதம்.... மனிதம்.....

மனசாட்சியை சாகடித்து - தாம்
வாழும் வாழ்க்கையை
அர்த்தமற்றதாக்கும் மனிதர்கள்;




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலர்ந்த ரோஜா - பேசும்
ஆசிரியரின் பேனா

# தெழுவாய்!

தம்மை உணர்ந்துகொள்ளும்போது
மீண்டும் உயிர்க்கும் மனிதம்!

அரசியல் சார்ந்த குழுக்களையோ
சங்கங்கள், மன்றங்கள் இவைகளையோ
நாம் சாடவரவில்லை.

எம்மினத்தின் பெரிய தலைமுறை
மறையும்போது
இளைய தலைமுறை
புதிய தலைமுறையாய்
பகைமை களைந்து வாழுமென்ற
நம்பிக்கை - சமீபத்தில்
நிலாவை மூடும் கருமேகங்கள்...?

வளர்ந்துவரும் கலைஞர்கள்,
நடிகர்கள், எழுத்தாளர்கள்........

இந்த மனிதம் தொலைந்த
'குழு'க்களில் புதையாது,
சுயமரியாதை கொண்டவர்களாக
வாழவேண்டும்.

வளர்ந்துவரும் அரும்புகளே!
தற்காலிக புகழ்மாலைக்காய்
சுதந்திரத்தை இழந்து வாழ்வது
ஒரு வாழ்க்கையா?

விழித்தெழுவாய்!

இளைதாக முள்மரங் கொல்க; களையுநர்
கைகொல்லும் காழ்த்த இடத்து.
- திருக்குறள்

வி. எஸ். அனந்த்


ROJAH
A Monthly Tamil Magazine

ISSN 1206-6303

July 1993



முகவரி
F.P.P.O., P.O.BOX 45593
747 DON MILLS RD
North York, ON. CANADA
M3C 3S4

Tel: **416-703 5689**
Fax: **416-425 2625**

இலவச செய்திச் சேவை
Tel: **416-202-8833**

மொன்றியல்
**திரு. சண்**
Montreal, Que.
Tel: **514-747-5931**

வன்கூவர்
**திரு. பாலா**
'ரோஜா' தொலைக்காட்சித் தயாரிப்பாளர்
Tel: **604-327 6977**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Tuition... Fashion.... Cancer.....

ரவுண்ட் அப்

• ராம்ராஜ்

ரியூசன், பஷன், கான்ஸர் இந்த மூன்று சொற்களுக்கும் என்ன தொடர்பு.....?!

இருக்கிறதே....!




- **பல்கலைக்கழக அனுமதிக்கு அரியதோர் சந்தர்ப்பம்.**
- **4 பாடங்கள் எடுத்தால் 5வது பாடம் அரைவாசி விலையில்**
- **Concerned with student progress.**
- **Refresher Courses for in Math and Physics for those whose are entering university.**
- **2 முதல் 13 வரை Homework குகளுக்கு உடனடி உதவி (தொலைபேசி ஊடாகவும்)**

இது போன்ற விளம்பரங்கள் பஸ்தரிப்பு நிலையங்களிலும், பத்திரிகைகளிலும் வானொலிகளிலும் கண்டிருப்பீர்கள் (கேட்டிருப்பீர்கள்). அதுவும் செமிஸ்டர் ஆரம்பத்தில் இந்த விளம்பரங்கள் பின்னிவிடும்.

அனேகமான பெற்றோர்கள் தலையைப் பிய்த்தபடி "ஐயோ...... .என்ர பெடியனை எங்க அனுப்பலாம்" என்று யோசிக்க ஆரம்பித்திருக்கிறார்கள். இது கனடாவில் தேவையானதொன்றா?

ரியூசன் சென்ரர்கள் இன்று ஒரு புற்று நோய் போன்று எல்லா இடங்களிலும் பரவிவருகிறது. போகிற போக்கில் தமிழ்க்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தனியார் கல்வி நிலையங்களின் பிழையான கற்பித்தல் முறைகளினால் நீண்ட காலப் போக்கில் மாணவர்களுக்கு கல்வி மீதே வெறுப்புண்டாகக் கூடிய நிலை தோற்றுவிக்கப்படுகிறது

கலாநிதி பார்வதி கந்தசாமி

கடைகளின் பேஸ்மென்றுகள் எல்லாம் ரியூசன் சென்ரராக மாறினாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

கனடாவிற்கு புலம்பெயர்ந்துள்ள தமிழ் மக்கள் பலரும் பொருளாதாரத்தைப் பொறுத்தவரை சராசரி அல்லது சராசரியை விடக் குறைந்த நிலையிலேயே வாழுகின்றனர். இந்நிலையில் அவர்கள் அதிக நேரம் வேலை செய்ய வேண்டிய கட்டாயத்திற்கு உள்ளாக்கப்பட்டு பிள்ளைகளுடன் செலவழிக்கவேண்டிய நேரத்தை இழந்து விடுகின்றனர். இதனால் பிள்ளைகள் தாம் தமது பாடசாலை வீட்டுவேலைகளுக்கு பெற்றோரின் துணையைப் பெறும் வாய்ப்பு அற்றுப்போவதுடன் அவர்களது உறவு முறையில்கூட இடைவெளி ஏற்படுகிறது. மேலும் பெற்றோரின் ஆங்கில அறிவும் கல்விக்கு துணை போதலில் ஒரு முக்கிய காரணியாகிறது. பல தமிழ்பெற்றோர் தமது நாளாந்த வாழ்வில் தொடர்பு மொழியாக ஆங்கிலத்தையே கொண்டாலும் கல்வி முயற்சிகளில் துணைபோகும் அளவிற்கு அவர்களுக்கு ஆங்கிலம் தெரியாதிருக்கிறது. இன்னும் பலருக்கு இங்குள்ள கல்விமுறையின் தன்மை மற்றும் இங்குள்ள கலாச்சார பின்னணி பற்றிய அறிவின்மை ஆகியனவும் பிள்ளைகளுடைய கல்வியில் துணைபோதலில் இடையூறாக விருக்கின்றன. இத்தகைய நிலையில் பெற்றோருக்கு தனியார் கல்வி நிலையங்களே கதியாகின்றன.

மற்றைய புறத்தில் இன்று தனியார் கல்வி நிலையங்களுக்கு பிள்ளைகளை அனுப்ப வேண்டும் என்பது சில பெற்றாரைப் பொறுத்த வரையில் நாகரிகத்தின் ஒரு அலகாகவே மாறிவிட்டது. பல தனியார்கல்வி நிலையங்கள் அலிபாபாவின் குகைபோன்ற இருண்ட தமிழ்வியாபார நிலையங்களின் பேஸ்மன்றுகளுக்குள்ளேயே நடத்தப்படுகின்றன. இங்கு கல்வி கற்பிக்கும் ஆசிரியர்கள் எந்தவகையில் கல்வியூட்டலில் திறனுடையோர் என்பதை ஆராய பல பெற்றார் தவறி விடுகின்றனர். இலங்கையில் க.பொ.த உயர்தர பரீட்சையில் சாதாரண சித்தியெய்தியவர்கள்கூட கனடாவில் வேலைவாய்ப்பின்மையைக் காரணமாகக்கொண்டு அல்லது மேலதிக வருவாயைக்கருதி தனியார் கல்வி நிலையமொன்றை ஆரம்பித்து விடுகின்றனர். பாடசாலைகளில் கல்விபுகட்டும் ஆசிரியர்களுக்கும் இவர்களுக்கும் பெருமளவு வேறுபாடு காணப்படுகிறது. கனடாவிலுள்ள கல்வி முறைமை பற்றிய அறிவோ அதை ஆங்கிலத்தில் ஊட்டுதற்குத்தகுந்த அறிவோ இல்லாது கல்வி புகட்டத் தயாராகும் இந்த வியாபாரஆசிரியர்கள் எமது எதிர்கால சந்ததியிடையே தாக்கமொன்றை ஏற்படுத்தப்போகின்றனர்.

இங்கு நடைமுறையிலுள்ள கல்வி முறையினைப் பொறுத்தவரை ஒரு பிள்ளை பாடசாலையில் தனியே கல்வியை மட்டும்பெற்றுக் கொள்ளாது குழுவாகச் செயற்படுதல், சிந்தனைத்திறனை வளர்த்துக் கொள்ளல், தான் ஆய்ந்து கண்டவற்றை மற்றையோருக்கு தெளிவாக்கல் போன்ற பல செயற்பாடுகளை கற்றுக் கொள்கிறது. இதை விடுத்து தனியார் கல்வி நிலையமொன்றில் உருவாகும் மாணவர் நீண்டநோக்கில் சுயமாகச் சிந்தித்து பிரச்சனைகளைத் தீர்ப்பதற்குரிய ஆற்றலை இழந்து விடுகிறார். குறுகிய கால நோக்கில் பாடசாலைகளில் நடக்கும் பரீட்சைகளில் இவர்கள் அதிக மதிப்பெண்களை பெற்றாலும் நீண்ட காலநோக்கில் இவர்களுக்கு எதுவுமே பலனளிக்காது போகலாம். இந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எம்மைப் பொறுத்தவரை தேவையில்லாத ஒன்று....

அருட்செல்வி அமிர்தானந்தர்

மாணாக்கர்கள் தமது சொந்த எதிர் காலத்தைத் தேர்ந்தெடுப்பதற்கு தமது மூளையை நம்பியிராது சமுதாயத்தி னதும், பெற்றாரினதும் மூளையை நம்பி யிருக்கும் நிலைக்குத் தள்ளப்படலாம். எதிர்காலத்தில் எமது சமூகத்தின் தேவை களை ஆய்வுசெய்வதற்கு அல்லது எமது சமூகத்தின் தேவைகளை எமக்குள்ளேயே தீர்த்துக் கொள்ளவும் முடியாத நிலைக்கு நாம் இட்டுச் செல்லப் படக்கூடும்.

எனவே இவ்வகைத் தனியார் கல்வி நிறுவனங்களால் எமது சமூகத்தில் ஏற்பட இருக்கும் பாதிப்புப் பற்றி சமூகவிய லாளர்கள், ஆசிரியர்கள், பெற்றோர், மாணாக்கர் ஆகியோரின் கருத்தை அறிய முனைந்தோம்.

## கலாநிதி பார்வதி கந்தசாமி



"ரியூஷன் என்பது ஒரு பாரதூரமான ஒரு விடயம். அது நிச்சயமாக எமது சமுதாயத்திலிருந்து ஒழிக்கப்படவேண்டும். இங்குள்ள சிலசில நடைமுறைகளை ரியூஷன் ஆசிரியர்கள் தமக்கு சாதக-மாகப் பயன்படுத்திக் கொள்கிறார்கள். எமது பெற்றோர்கள் இங்குள்ள பல வசதிகளைப் அறியாமல் அல்லது அறிய அக்கறையில்லாது தமது பிள்ளைகளை ரியூஷனுக்கு அனுப்புகிறார்கள். சகல பெற்றோரும் தமதுபிள்ளைகள் பிள்ளைகள் பாடசாலையில் முன்னணியில் இருக்க வேண்டும் என்று எதிர்பார்ப்பது இயல்பு. ஆனால் ரியூஷனில்தான் இது கிடைக்கு மென்பதில்லை. இதற்குப் பல வழிகள் பாடசாலைக் கல்விமுறையிலுள்ளன. உதாரணமாக Peer Tutoring என்று கூறப்படுகின்ற மாணவர்களே மாணவர் களுக்கு கற்பித்தல், Skill Lab இற்கு சென்று படித்தல், மற்றும் பாடசாலை களில் பல Clubகளில் இணைந்து கொள்ளல், இதைவிட Libraryகளுக்கு சென்று பாடங்கள் தொடர்பான Video, Audio Cassete மூலம் கற்றல் எனப்பல வழிகளுள்ளன. தனியார் கல்வி நிலை யங்களின் பிழையான கற்பித்தல் முறை களினால் நீண்டகாலப்போக்கில் மாணவர் களுக்கு கல்வி மீதே வெறுப்புண்டாகக் கூடிய நிலை தோற்றுவிக்கப்படுகிறது. பாடசாலைகளில் Independent Study, Group Study போன்ற முறைகளில் பயிலும் மாணவன் ரியூஷனுக்கு செல்லும் போது உளவியல் ரீதியிலான பலபாதிப்பு களுக்கு உள்ளாகிறான். ஏனெனில் இரண்டு கல்விமுறைகளுக்குமிடையில் பாரிய வேறுபாடு காணப்படுகிறது.

தலைமைத்துவம் என்பது கனடிய சமுதா யத்தைப் பொறுத்தவரை மிகவும் அவசிய மானதொன்று. பாடசாலையில் பல activity களிலும் பங்குபற்றும் ஒரு மாணவனுக்கே இப்பண்பு கிடைக்கும். ரியூஷன்களிக்குப் போவதால் மற்றைய activityகளுக்கு செல்லாமல் தலைமைத்துவத் தன்மையை இழக்கும் ஒரு மாணவனுக்கு கனடிய சமுதாய ஓட்டத்திற்கு ஈடுகொடுக்க முடியாமல் போகும் நிலைஉண்டாகிறது."

"தனியார் கல்வி நிலையங்கள் என்ன வகையான பாதிப்புகளை எதிர்காலசமுதா யத்தில் ஏற்படுத்தும்"

"எதிர்காலத்தில் பிள்ளைகளுக்கு படிப்பில் வெறுப்பு ஏற்படும். சுயமாகச் சிந்திக்காத சமுதாயம் ஒன்று உருவாகப்போகிறது. மாணவர்கள் குறிப்பிட்ட ஒரு வகுப்பிற்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரும்போது குழுக்கல்வி முறை போன்றன அறிமுகப்படுத்திப்பட பல மாணவர்கள் பாடசாலையிலிருந்து வெளியேறுகிறார்கள். இது ஆரோக்கியமானதல்ல."

## அருட்செல்வி அமிர்தானந்தனர்

(யோர்க் பல்கலைக்கழகம்)



"இது எம்மைப் பொறுத்தவரை தேவையில்லாத ஒன்று. சில தனியார்கல்வி நிலையங்களில் பாடசாலைகளில் கொடுக்கப்படும் Assignmentகளை தாங்களே செய்து கொடுக்கிறார்கள். மாணவர்கள் எந்த விளக்கமுமின்றி பாடசாலையில் அதற்கு பூரண மதிப்பெண் பெற்றுவிடுகிறார்கள். இலங்கைக் கல்வி முறையில் தனியார் கல்வி நிறுவனங்கள் தேவைப்பட்டிருக்கலாம். கனடிய கல்விமுறையில் பாடங்களை விளங்கிக்கொள்ள பல வழிமுறைகளை பாடசாலைகள் கையாளுகின்றன. எல்லாவற்றையும் பாடசாலையிலேயே பெற்றுக் கொள்ளக்கூடியதாக உள்ளது."

## மெல்வின் சவரிமுத்து

(மாணவன்)

"இங்கு பாடங்கள் விளங்காவிடின் பல வழிகளில் பலரைத் தொடர்பு கொண்டு அதை விளங்கிக் கொள்ளலாம். உதாரணமாக Friends இடம் கேட்கலாம். Telephone கனடாவைப் பொறுத்தவரை Free. Telephone இனூடாக கேட்டுத் தெரிந்து கொள்ளலாம். Library க்கு போகலாம். e.mailஐப் பாவித்து தெரிந்து கொள்ளலாம். எனது அனுபவத்தில் பாடசாலையில் ஏதாவது விளங்காவிடின் எத்தனை தடவை கேட்டாலும் ஆசிரியர்கள் சொல்லியே தருவார்கள். இதுகளை யூஸ் பண்ணாமல் சும்மா சப்பிக் கொண்டே திரிவதில் எதுவித பிரயோசனமுமில்லை.

**பல்கலைக்கழகம் புகுந்தாலும் சுயமாக சிந்தித்து கல்வி கற்க முடியாத நிலை ஏற்படும்.**

*செ. ராஜேந்திரா*

## செ. ராஜேந்திரா

(யாழ். பல்கலைக்கழக முன்னாள் சமூகவியல் விரிவுரையாளர்)

எமது சமுகத்தைப் பொறுத்தவரை ரியூஷன் தேவையில்லாத ஒன்று. எமது தாயகத்தின் கல்வி முறையுடன் கனடிய கல்வி முறையை ஒப்பிடுவதானாலேயே ரியூஷன் இன்று கனடாவில் எமது சமூகத்தவரிடையே பரவி வருகிறது. தாயகக் கல்வி முறையில் போட்டி மனப்பான்மை இறுதித் தேர்வுப் பரீட்சைகள், பல்கலைக் கழக அனுமதியில் 'தரப்படுத்துதல்' போன்ற பல காரணிகள் ரியூஷன் தோன்றுவதற்கு முக்கிய காரணிகளாக இருந்தன. இங்கே அப்படியொரு கல்விமுறை இல்லை. ஒரு மாணவன் அல்லது மாணவி கல்வி கற்கும் பாடசாலையை சரியாகப்பயன்படுத்தும்போது பல்கலைக்கழகம் செல்லும் வாய்ப்பைப் பெறுகிறான். பாடசாலையைப் பயன்படுத்துவது என்பதில் பல வழிமுறைகள் உள்ளன. Peer Help, Educational Counsiling, Special Help...... போன்ற பல இந்த வழிமுறைகளில் அடங்கும். இப்படியொரு நிலை இருக்கும்போது ரியூஷன் நிச்சயமாகத் தேவையில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*பாடசாலை வீட்டுவேலைகளுக்காக மட்டும் தனியார் கல்வி நிலையங்களுக்கு செல்லும் நிலை இருக்கும்போது எப்படி மாணவர்கள் தமது சிந்தனா சக்தியை வளர்த்துக் கொள்ள முடியும்?*

*பொ. கனகசபாபதி*



வியாபாரத்தை நோக்கமாகக் கொண்டு செயற்படும் இந்த ரியூஷன் மாணவர்களின் பல திறண்களை முற்றுமுழுதாகப் பாழடிக்கிறது. பாடசாலைக் கல்வியை முடித்துவரும் மாணவனுக்கு ஓய்வுநேரம் முக்கியமாகத் தேவை. இந்த ஓய்வு நேரம் ரியூஷனில் கழிவதால் ஒரு ஊக்கமின்மை ஏற்படுகிறது.

ஒரு மாணவன் ரியூஷன் கல்விமூலம் அதிக புள்ளிகள் எடுத்து பல்கலைக் கழகம் புகுந்தாலும் அவனால் சுயமாகச் சிந்தித்து கல்வி கற்க முடியாத நிலை ஏற்படும். கனடிய கல்வி முறையில் 'சுய தேடல்' மூலம் பெறும் கல்வியே ஊக்கப் படுத்தப்படுகிறது. ஆனால் ரியூஷன் கல்வியில் ஊட்டுதல், மனப்பாடம் செய்தல் மூலமே பெருமளவு மாணவர் கல்வி புகட்டப் படுகிறார்கள்.

## பொ. கனகசபாபதி

(நோர்த் யோர்க் - கல்விச்சபை ஆலோசகர்)

இலங்கையில் இருக்கும் கல்வி முறையைப் பொறுத்தவரை தனியார் கல்வி நிலையங்களின் தேவை அவசியமானதாக இருக்கிறது. ஏனெனில் அங்கு மாணவர்களுக்குத் தேவையான மூலவளம் மிகவும் குன்றியே காணப்படுகிறது.

இதனால் ஆசிரியர்கள் மாணவர்களுக்காக அதிகம் வேலை செய்ய வேண்டிய நிலை உள்ளது. ஆசிரியர்களில் மட்டுமே தங்கியிருக்கும் மாணவர்களுக்கு, சகல பாடங்களுக்கும் திறமையான ஆசிரியர்கள் கிடைப்பது குறைவு. இதனால் திறமையான ஆசிரியர்களைத் தேடி மாணவர்கள் தனியார் நிலையங்களை நாடுகிறார்கள்.

அத்துடன் அங்கு காணப்படும் கல்விக்கான போட்டிப் பரீட்சைகளும் தனியார் கல்வி நிலையங்களின் வளர்ச்சியை மேலும் வளப்படுத்தின. பின்னர் இது ஒரு நாகரிகமாகவும் மாற்றம் கண்டது.

கனடாவில் இருக்கும் கல்வி முறையில், மாணவர்களுக்குத் தேவையான மூல வளம் பெருமளவில் நிறைந்து காணப் படுகிறது. ஊக்கமுள்ள எந்த ஒரு மாணவனும் இந்த மூலவளங்களை சரியாக பயன்படுத்தி தனது நிலையை வளம்படுத்திக்கொள்ள முடியும். ஆசிரியர்களை மட்டும் நம்பி இங்கு எந்த ஒரு மாணவரும் இல்லை. ஆசிரியர்கள் இங்கு வெறும் வழிகாட்டிகளாவே தொழில்படுகிறார்கள்.

அத்துடன் இங்கு போட்டிப் பரீட்சைகள் எதுவும் கிடையாது. ஊக்கமுடன் படிக்கும் யாவருக்கும் மேற்படிப்பு வசதிகள் கிடைக்கின்றன.

அதனால் இங்கு தனியார் கல்வி நிலையங்கள் அவசியம் இல்லையென்றே கருதுகிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால் இங்கு நடப்பது என்ன...?

- பெற்றோருக்கு ஆங்கிலம் தெரியாது....
- பெற்றோருக்கு நேரம் இல்லை......
- இதுவும் ஒரு நாகரிகம்...

என்ற பல காரணங்களை முன்வைத்து இன்று பல மாணவர்கள் பெற்றோர் களினால் தனியார் கல்வி நிலையங் களுக்கு அனுப்பப்படுகின்றார்கள்.

கனடிய பாடமுறைகள் எதுவும் அறியாத வர்கள் பலர் இன்று எம் மத்தியில் பெரு மளவிலான தனியார் கல்வி நிலையங் களில் ஆசிரியர்களாக கடமையாற்று கின்றார்கள். இவர்களின் தவறான கற்பித்தல் முறையினால் பாதிக்கப்படுவது மாணவர்கள் மட்டுமே.

பாடசாலை வீட்டு வேலைகளுக்காக "மட்டும்" தனியார் கல்வி நிலையங் களுக்கு செல்லும் நிலை இருக்கும்போது எப்படி மாணவர்கள் தமது சிந்தனா சக்தியை வளர்த்துக் கொள்ள முடியும்?

சிலவேளைகளில் 12/13ம் ஆண்டு மாணவர்கள் சிலருக்கு, குறிப்பிட்ட ஒரு சில பாடங்களுக்கு சிறப்புப் பயிற்சிகள் தேவைப்படலாம். ஆனால் முதலாம் ஆண்டு பிள்ளைகளே தனியார் கல்வி நிலையங்களுக்கு சென்றால்............?

இதை பெற்றோர்கள் பிள்ளைகளுக்கு செய்யும் துரோகம் என்றே நான் கருதுகிறேன்.

ஒரு பிள்ளையின் கருதுகோள் உருவாக் கத்திற்கு வீட்டில் பேசப்படும் மொழியே முக்கியமாகும். வீட்டில் பேசப்படும் மொழி மூலம் விடயங்களை இலகுவில் விளங்கப் படுத்தமுடியும். எனவே கருதுகோள்கள் (concept) சுலபமாக உருவாகமுடியும். வேறு ஒரு மொழியைப் பிள்ளைகள் கற்கின்ற பொழுது இக்கருதுகோள்கள் பரிமாறப்படுகின்றனவே அன்றி புதிதாக கற்கத் தேவை ஏற்படுவதில்லை.

இதற்கு பெற்றோர்கள் பிள்ளைகளுக்கு ஒரு வளமான சூழலை ஏற்படுத்த வேண்டுமே தவிர தனியார் கல்வி நிலை யங்களுக்கு அனுப்ப முனையக் கூடாது. வீட்டில் குறைந்தது இரண்டு மணித்தி யாலங்கள் ஒரு வளமான சூழலை ஏற்படுத்தி திறன் பரிமாற்றம் செய்யலாம். வளமான சூழல் என்பது தொலைபேசி, தொலைக்காட்சி, வானொலி போன்ற தொல்லைகளற்ற சூழல்.

இந்த திறன் பரிமாற்றத்திற்கு, பெற்றோ ருக்கு ஆங்கில அறிவு இருக்க வேண்டிய அவசியமில்லை. வீட்டில் பேசப்படும் மொழியிலேயே பரிமாறிக்கொள்ள முடியும். ஒரு மொழியில் திறன் இருக்கும் மாணவர் இன்னொரு மொழி பயிலும்போது அதில் சிறப்பு நிலை அடைவது இலகுவாக இருக்கும்.

எனவே பெற்றோர்கள் சற்று சிந்தித்து தனியார் கல்வி நிலையங்கள் பற்றி தெளிவான முடிவுகளை எடுக்க வேண்டும் என்று நான் கருதுகிறேன்.

## இந்திரா

(குடும்பத் தலைவி)

நான் ரியுசன்பற்றி சிந்திப்பதே கிடையாது. ஏனெனில் எனது பிள்ளைகள் விடயத்தில் மிகவும் கவனமாக நடந்து கொள்கிறேன்.

10 டாலர்கள் கொடுத்து Parents as Parents என்ற புத்தகத்தை School இல் வாங்கி அதில் உள்ள method இன்படி எனது பிள்ளைகளை வழிநடத்துகின்றேன். School விட்டு வந்தவுடன் என்ன படித் தீர்கள், என்ன Homework என்று அறிந்து விடுவேன்.

அது மட்டுமல்ல term ஒன்றுக்கு ஒரு தடவை நடக்கும் Parents Interviewக்கு தவறாமல் கலந்து கொள்வேன். அது மிகவும் பிரயோசனமானதாக இருக்கும்.

எனக்கு தெரிந்த பலர் தமது பிள்ளை களை ரியூசனுக்கு அனுப்புகிறார்கள். அப்படி அனுப்புவதற்கு எனக்கு பொரு ளாதார வசதிகள் இல்லை. இருந்தாலும் அதற்காக நான் கவலைப்பட்டதே கிடையாது. ஏனெனில் எனது பிள்ளைகள் எப்போதும் வகுப்பில் முன்னிலையிலேயே நிற்கிறார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ராஜனனி
## கனகசபை (M.Eng.)

ஒரு மாணவனுக்கு குறிப்பிட்ட பாடம் கடினமாக இருந்தால் அதில் உள்ள சந்தேகங்களை நிவர்த்தி செய்வதற்கு தனிப்பட்ட ரீதியான தேவையை நாடுவதில் தவறில்லை என்றே கருதுகின்றேன்.

ஒரு சாதாராண குடும்பத்தில் பிள்ளைகளின் கல்வியில் உதவி செய்யும் பெற்றோர்கள் நீண்ட கால நோக்கில் பல பிரச்சனைகளை எதிர்நோக்குகின்றார்கள். உதாரணமாக பெரும்பாலும் பெற்றோர்களால் 9ம்,10ம் ஆண்டு பிள்ளைகளுக்கு உதவி செய்ய முடிவதில்லை.

இதன் காரணமாக அப்பெற்றோர்கள் தங்களால் உதவி செய்ய முடியாத பாடங்களுக்காக தனிப்பட்ட ரீதியான போதனைகளுக்கு பிள்ளைகளை அனுப்புகிறார்கள்.

கனடாவில் மாணவருக்கான படிப்பு வசதிகள் அதிகமாக இருந்தாலும் அவர்களை அதில் நாட்டம் கொள்ள வைப்பதே பெரிய விசயமாக இருக்கிறது. அந்த நாட்டத்தை ஏற்படுத்துவதற்கு பெற்றோர் முயற்சி எடுக்கவேண்டும். அதிலும் பிள்ளைகள் ஊக்கம் காட்டாது விட்டால் மட்டுமே தனிப்பட்ட ரீதியான போதனையை நாட வேண்டும்.

எப்போதும் தனிப்பட்ட ரீதியான போதனையை மேற்கொள்ளும் ஒரு ஆசிரியர் கல்வியைவிட வருமானத்தில் அக்கறை எடுக்கிறாரோ? அப்போது அந்த கல்வி முறைமையே மாறுபடுகின்றது.

போதனையில் ஈடுபடும் ஆசிரியர்கள் கட்டாயமாக கனடிய பாடத்திட்டங்களுக்கமைய கல்வி புகட்டுவதுடன் அந்த மாணவர்களுக்கு சிறந்த ஆலோசகராகவும் இருக்க முயற்சி செய்ய வேண்டும்.


**அடுத்த இதழிலிருந்து...**

- *சிறுகதை*
- *சிறுவர் பூங்கா*
- *குறுக்கெழுத்துப் போட்டி*
- *விவேகச் சக்கரம்*
- *யோக்ஸ்*
- *அக்கினி பதில்கள்*

*உங்கள் கேள்விகளைப் 416-703-5689 என்ற தொலைபேசி இலக்கத்தில் பதிவுசெய்யுங்கள்.*

**விரைவில்...**

- *'ரோஜா' கலைஞர்களின் சுற்றுலாக் கட்டுரை*

**இலவச செய்திச் சேவை**

**நவம்பர் 1ம் திகதி முதல் மீண்டும் ஆரம்பம்**

**(416)**

**202-8833**

தமிழ் கிரியேட்டஸ் - கனடா




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சோ சோயா சீனாவில் பல நூறு ஆண்டுகளுக்கு முன் பாவிக்கப்பட்ட ஒரு தாவர உணவாகும். அது பின்னர் அங்கிருந்து மெதுவாக ஆசிய நாடுகளை நோக்கி நகரத் தொடங்கியது. Japan, Singapoor போன்ற நாடுகளில் இன்றும் சோயாவிற்கு முக்கியத்துவம் கொடுத்து வருகின்றார்கள்.

இற்றைக்கு இருநூறு ஆண்டுகளுக்குமுன் சோயா தன் ஆதிக்கத்தை அமெரிக்க நாட்டில் நிலைநாட்டியது. இன்று சோயா உற்பத்தியில் முன்னணி வகிக்கும் நாடு Canada என்பதை அறியும் போது மிகவும் பெருமையாக இருக்கிறது.

**சோ சோயாவும் சுகாதார உணவின் மறு மலர்ச்சியும்**

எம்மவரைப் பொறுத்த மட்டில் இந்த அற்புதத் தாவர உணவு இங்கிருந்து இலங்கைக்கு ஏற்றுமதியாகி அங்கிருந்து சிறு சிறு Packetகளில் அடைக்கப்பட்டு பின் மீண்டும் Canada, Americaவுக்கும் ஏற்றுமதி செய்யப்பட்ட ஒரு பொருளாகும்.

இப்படியாக இலங்கையிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட 100g Soya Packetஇன் விலை $1.99 ஆகும். இந்த சோயாவை இனம் கண்டு அதன் நன்மைகளை அறிந்து தமிழ் மக்கள் மத்தியில் குறைந்த விலையில் தயாரித்தளித்த பெருமை PORTELLO உரிமையாளருக்கே உரியதாகும். இன்று 300g சோ சோயா Packetஇனை $1.99 வாங்கக் கூடியதாக இருக்கிறது.

இந்தப் புத்தம் புதிய சோ சோயா இன்று பல் இன மக்களின் கவனத்தையும் ஈர்த்து எடுத்துக் கொண்டிருக்கிறது. அதன் பலனாக So Soya PRICE CHOPPER, HIGHLAND FARM, FORTIONRS போன்ற கடைகளில் இன்று விற்பனையாகிக் கொண்டிருக்கிறது.

இந்த சோ சோயாவின் அருமை பெருமைகளை பல் இன கலாசார வர்த்தக நிலையங்களில் பார்வையிட்ட C.F.T.O. CITY T.V, B.B.S, TORONTO STAR, போன்ற பிரமுகர்கள் சோ சோயாவின் தனிச் சுவையை பாராட்டி பிரபல்யப்படுத்தியது PORTELLO ஸ்தாபனத்தாரின் தனிப்பட்ட பெருமையாகக் கருதுகிறார்கள்.

**1) சோ சோயா என்றால் என்ன?**

சோயா என்பது ஒரு சிறிய தாவரம் அதன் விதைகளை அரைத்து மாவாக்கி அதனை உரிய முறையில் பதப்படுத்தி பெறுவதே சோ சோயாவாகும். 52 விதமான சோயா தாவர விதைகளிலிருந்து தரமாக தேர்ந்து எடுக்கப்பட்ட Protein செறிந்த உணவே சோ சோயாவாகும்.

**2) சோ சோயாவின் நன்மைகள் என்ன?**

எமது உடல் வளர்ச்சிக்கு Protein அவசியம் என்பது யாவரும் அறிந்ததே. இந்த புரதச் சத்தை அதிகமானோர் மாமிசங்களிலிருந்தே பெற்றுக்கொள்கின்றனர். மாமிசத்தை புசிக்கும் போது அத்தோடு கொழுப்புச் சத்தையும் சேர்த்து உட்கொள்ளுகிறார்கள்.

மாமிசத்திற்குப் பதிலாக அதற்கு மாற்றுணவாக சோ சோயாவை உண்ணலாம். (FAT 1%, CHLOSTROL FREE, PROTEIN 52%)

இப்போது சோ சோயாவின் Mince வெளிவந்துள்ளது. Chlostral செறிந்த தேங்காய் துருவலை நீக்கி அதற்கு பதிலாக சோ சோயா Minceஐ வறை சம்பல், முதலியன செய்வதற்கு பாவிக்கக் கூடியதாக இருக்கிறது. இது தவிர Vegetable Cutlets, Patties, Rolls முதலியனவும் சோ சோயாவில் செய்யலாம்.

**3) மிகவும் காய்ந்த சோ சோயாவின் தன்மைகள் என்ன?**

சோ சோயாவை தண்ணீரில் ஊற விட்டு அது மூன்று மடங்கு நிறை கூடியதாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருப்பதைக் காணக்கூடியதாக இருக்கின்றது. அதாவது 300 grams சோயாவை ஊறவைத்தால் அது 1200 grams ஆக மாறுகிறது. இவற்றை எல்லாம் விட சோ சோயாவின் புகழ்ச்சிக்கு முக்கிய காரணம் என்ன என்று பார்க்கையில் இது பல விதமான நோய்களைத் தடுக்கும் சக்தி வாய்ந்ததாக விஞ்ஞானிகளால் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. முக்கியமாக Cancer, இருதயநோய்(Heartattack), Diabetic, High blood Pressure, Chlostral, போன்ற பயங்கர நோய்களை எதிர்க்கும் சக்தி வாய்ந்த தன்மைகள் சோ சோயாவில் காணப்படுவதாக அறியத்தருகிறார்கள். உதாரணமாக சோ சோயாவில் காணப் படும் ISO FLAVONES Cancer வராமல் தடுக்கும் சக்தி வாய்ந்தது.

ஆசியாக் கண்டத்தில் வாழும் மக்களிடையே இத்தகைய நோய்கள் குறைவாகக் காணப்படுவதற்குக் காரணம் அவர்கள் நாளாந்தம் சோயாவை தங்கள் உணவுகளில் சேர்ப்பதே எனக் கணிக்கப் பட்டுள்ளது.

இந்த உண்மைகளைப் பற்றிய விபரங்கள் வாசிகசாலைகளில் உள்ள சோயா வைப் பற்றிய புத்தகங்களிலும், Canadian Living 1997, ஜனவரி மாத இதழிலுமிருந்தே பெறப்பட்டு தமிழாக்கம் செய்யப் பட்டது. மேலதிக விபரங்களுக்கு:


Internet
W.WW. Portello. com
அல்லது
(416) 293-6555 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.


## பிரசுர விநியோகம்

**உங்கள் விளம்பரப் பிரசுரங்கள் சிறு பார்சல்கள் என்பவற்றை விநியோகிப்பதற்கு அழையுங்கள்**

**சோதி**
**416-724-4254**


# You too Mr. Liony ?



பட்டிமன்றம் புகழ் லியோனி நடித்துள்ள *'கங்கா கௌரி'* திரைப்படம் அண்மையில் வெளிவந்தது. திரைப்படங்களைப் பற்றி லியோனி எந்தெந்த குறைகளைச் சொன்னாரோ அதில் பலவற்றை தானே செய்திருக்கிறார். வசனங்கள் பேசுகிறார். தாலியைப்பற்றி தத்துவங்கள் உரைக்கிறார்.
இதில் N. S. கிருஷ்ணன் பாட்டுக்கு டப்பாங்கூத்து ஆட்டம்வேறு.
S.P.B படத்தில் நடித்தபோது இவருக்கேன் இந்த வேலையென்று கேட்டதை மறந்து விட்டாரோ....?
So லியோனி! நாய்க்கேன் போர்த்தேங்காய்.....?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நவநீதன் சண்முகராஜா
East York C. I.
GRADE - 13

# என்னைப்பற்றி...

| | | |
|---|---|---|
| நான் அதிகமாக நேசிப்பது.......... | - | அவளை மட்டும்தான்! |
| எனக்கு இருக்கும் சொத்து............ | - | நான் பேசும் நான்கு மொழிகள்! |
| மறக்க முடியாத சம்பவம்............ | - | *Oh!* மறந்து போச்சு! |
| எனது பலவீனம்........................... | - | பகல்கனவு! |
| என் மனசை பாதித்தது................ | - | அவளது "கண்" (*Gun*) தாக்குதல்! |
| பெண்களிடம் என்னைக் கவர்ந்தது.................................... | - | அது ஏதோ??? அதை அறியாமல் விடமாட்டேன்!!! அதுவரை......! |
| எனக்கு பிடித்த Life Style........ | - | *Being Cool!!!* |
| என் இதயத்தை தொட்டது........ | - | கட்டாயம் என் "*Blood*" மட்டும்தான்! |
| படுக்கை அறையில் எனக்கு பிடித்தது................................... | - | *Snooooooooring!* |
| எனக்கு பிடிப்பது........................ | - | கடிப்பது! (உங்களைத்தான்)! |
| தமிழ் சினிமாவில் பிடித்தது......... | - | கவுண்டர் செந்தில் *Combo!* |
| தவிர்க்க விரும்புவது.... | - | என்னைப் பற்றி மேலும் எழுதுவதை! |

### என் கவிதைகளும் நானும்

அன்று அந்த ரோஜாவை எண்ணி
என் மனம் சிந்திய எண்ணங்கள்
இன்று இந்த ரோஜாவை அலங்கரிக்க வரும்
பல வண்ணங்கள்

• *நீதன்*

**அறிமுகம் ஒரு புதுமுகம்**

## நீயில்லாமல்....

என் காதல் கானல்நீரானது!
என் வாழ்க்கை கண்ணீரானது

என் நினைவே அவளானது!
என் பாதை முள்ளானது

என் கனவே அவளானது!
என் மெத்தை கல்லானது

என்னவள் அழகு ஓவியமானது!
என் வாழ்க்கை காவியமானது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சொல்லுங்கள்! கேட்கப்படும்!!!

அன்று East Yorkஇல் உள்ள Marc Garnequ CIஇல் திரும்பிய திசையெல்லாம் தமிழ் முகங்கள் தெரிந்தன. காரணம் Thorncliffe Neighbourhood Office (TNO) அங்கு நடத்திய ஒரு தமிழ் Conference தான். Library இல் நடந்த இந்த ஒன்றுகூடலில் திரு. கனகசபாபதி, திரு. திருச்செல்வம், EYCI. MGCI Schools Principals மேலும் பல முக்கிய பிரமுகர்கள் வந்திருந்தார்கள். நிகழ்ச்சியில் பல முக்கிய பிரமுகர்களின் பேச்சுகளின் பின் மூன்று Workshops நடத்தப்பட்டது.

"தமிழ் இளைஞர்கள் நோக்கும் பிரச்சனைகள்" என்ற Workshopஐ நடத்தும் பெரும்பணி எனக்குக் கொடுக்கப்பட்டிருந்தது. நாடு விட்டு நாடு வந்து நம் இளைஞர்கள் இரண்டு கலாசாரத்திற்கிடையில் சிக்கி செய்வதறியாது தவிக்கின்றனர். கனடிய தமிழ் இளைஞர்களில் கடும் குளிரிலும் Jeans போடாமல் Stiched pantsஐ போடும் இளைஞர்களும் உண்டு. Dateக்கு Date dating போகும் இளஞர்களும் உண்டு. ஆனால் பெரும்பாலானோர் இரண்டு கலாசாரத்திற்கும் இடையில் ஒரு கோடிட்டு அதில் நிற்கிறார்கள். நான் நடத்திய பல்வேறு Workshopஇலும் இது மிகவும் வித்தியாசமானதாக இருந்தது.

***"என்னுடைய தம்பி வீட்டுக்கு எந்த நேரமும் வரலாம் போகலாம்; நான் பெண் பிள்ளையாகப் பிறந்ததால ஒரிடமும் போகேலாது"***

ஏறக்குறைய 40 தமிழ் இளைஞர்கள் அங்கு வந்திருந்தார்கள். வந்த அனைவரும் தங்கள் பிரச்சனைகளை எம்மிடம் மனம்விட்டுக் கூறினார்கள். அவர்கள் மனம்விட்டுக் கூறியதில் எனது மனம்தொட்ட சிலவற்றை இந்த பகுதியில் குறிப்பிட வந்தேன்.

"வீட்டில் ஒரு Partyக்கு போக விடுறினமில்லை. ஒரு படத்துக்குப் பேகேலாது. எங்கட வயசுல இதெல்லாம் செய்யாம எப்ப செய்றது!" இதற்குள் இன்னொரு பெண் குறுக்கிட்டு "அண்ணா, நீங்கள் ஊர்வசி ஊர்வசி பாட்டு கேட்டீங்களா? அதுல வருகுதெல்லா 20 வயதில் ஆடாமல் 60இல் ஆடி என்ன பயன் என்று" என்றார். இந்த விஷயம் சினிமாவை எங்கள் கலந்துரையாடலில் கொண்டு வரவே ஒரு வாலிபன் "சினிமாவை இங்கு இழுக்காதீர்கள். நாங்கள் real life பற்றி கதைக்கிறோம்" என்று ஊர்வசி பாட்டுக்குத் தடை விதித்தார்.

மேலும் சில girls குறிப்பிட்டவை.

- "என்னுடைய அப்பா நான் என்ன சொல்லவாரன் எண்டு கேட்கக்கூட மாட்டார். என்னுடைய தம்பி வீட்டுக்கு எந்த நேரமும் வரலாம் போகலாம்; ஆனால் நான் பெண்பிள்ளையாகப் பிறந்ததால ஒரிடமும் போகேலாது. School முடிஞ்சு உடனேயே வீட்ட கோகவேனும்...."

- "எல்லா பெற்றோரும் தங்கட பிள்ளைகள் Universityக்கு போகனும் எண்டு யோசிக்கினம். Universityக்கு போறது எவ்வளவு கஷ்டம் எண்டு அவைக்குத் தெரியல்ல..."

- "நானும் ஒரு girlஉடம் close frientsஆக இருந்தனாங்கள். இரண்டு பேருமாச் சேர்ந்து சின்னப் பிரச்சனையில் மாட்டிக்கொண்டோம். பிழை இரண்டு பேரும்தான் விட்டனாங்கள். ஆனால் என்னுடைய அப்பா, அம்மா அந்த girlஐப் பேசி கூடாம எல்லாம் கணபேரோட

கதைச்சிட்டினம். இது என்னுடைய friend-shipஅ சரியாகப் பாதிச்சிட்டுது."

Girls கூறிய பிரச்சனையில் சிலவற்றைத் தந்தோம்; இனி boys சிலரின் பிரச்சனைகள்....
பல girlsஐப் போல் boysக்கும் காதலே பெரிய பிரச்சனையாக இருந்தது.
"ஆண்கள் பெண்களை ஏமாத்துகிறார்கள்; இல்லை பெண்கள் ஆண்களை ஏமாத்துகிறார்கள்" என இருதரப்பினரும் குற்றம்சாட்டி சத்தம் பலமாகிக்கொண்டுபோனது. அந்த வேளையில் கடமைச் செய்யும் நோக்குடன் தலைப்பை மாத்தினேன். Boy ஒருவர் புதுப் பிரச்சனை ஒன்றை எழுப்பினார்.

"நான் ஒருவிதமான பிரச்சனைக்கும் போவதில்லை. ஆனால் நான் போர்ற உடுப்ப வச்சு 'ரவுடி' என்று ஆல்லாரும் நினைக்கினம்".
இதற்கு ஒரு பெண்......
"இந்த உடுப்போடு நீங்கள் Sri Lankaல நடந்தா, சனம் எல்லாம் ஒரு மாதிரி பாக்க மாட்டினமா?"
அந்த பெண்மணி அணிந்திருந்த body suit ஐயும் Guess jeansஐயும் பார்த்து விட்டு "நீங்க போட்டு இருக்கிற உடுப்போட Sri Lankaல நடந்தாலும் ஒரு மாதிரித்தான் பார்ப்பாங்க" என்றேன்.

"எங்கள் road இல் (road இன் பெயர் குறிப்பிட நான் விரும்பவில்லை) ஏதாவது உதவி செய்தா பெரிசா நல்லா கதைப்பினம். இல்லாட்டி அந்த பழசுகள் எங்கட உடுப்பப் பற்றியும் நடையைப் பற்றியும்தான் கதை" என்றான் ஒரு Paco jeans Fila top இல் கலக்கிக் கொண்டிருந்த ஒரு மாணவன்.
சில மாணவர்கள் தங்கள் சண்டைகளின் பிறகு விசாரிக்கப்படும்போது கடுமையாக நடத்தப்பட்டதாகவும், மற்ற குழுவினர் ஒரு பிரச்சனையுமின்றி தப்பியதாகவும் கூறி மனவருத்தப்பட்டனர்.

இப்படியாக பல இளைஞர்கள் தங்கள் குறைகளை கூறினார்கள். வன்முறையில் எங்கள் இளைஞர்கள் இறங்குவதற்கு பல காரணங்கள் கூறப்பட்டது.
வேலையில்லாமை, மொழிப்பிரச்சனை, இனத்துவேசம் போன்றவை காரணமாகக் கூறப்பட்டாலும் இதுபற்றி விபரமாகக் கருத்துத் தெரிவிக்க எவரும் விரும்பவில்லை.

இந்த Conference இன் முடிவில் தமிழ் மாணவ மாணவிகள் நோக்கும் பிரச்சனைகள் பலவற்றைத் தங்கள் வாயாலேயே கூறினார்கள். இந்த பிரச்சனைகளில் பெரும் பகுதி பெற்றோர்களால் பிள்ளைகள் நோக்கும் பிரச்சனைகள் தான். ஆகவே TNC போன்ற அமைப்புக்களின் உதவியுடன் பெற்றோர்கள் முன்னேற்றத்தை நோக்கி சென்றுகொண்டிருக்கும் இளைஞர்கள் நோக்கும் பிரச்சனைகளை குறைக்க முயற்சிக்க வேண்டும். அதுவே எங்கள் இளைஞர்களின் ஒளிமயமான எதிர்காலத்திற்காக பெற்றோர்களாகிய நீங்கள் எடுக்கும் முதல் நடவடிக்கையாக அமையட்டும்.


# தமிழன் வழிகாட்டி

1998ம் ஆண்டுக்கான விளம்பரக் கைநூல் தயாராகிறது!
உங்கள் விளம்பரங்களை இன்றே இணைத்துக் கொள்ளுங்கள்.

**ஆதவன் பப்ளிக்கேஷன்**
**416-438-9797**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலமெல்லாம் காதல் வாழ்க!

## காதல் பற்றி Youngesters...

"காலமெல்லாம் காதல் வாழ்க" என்று வாயார காதலை வாழ்த்துகிறார் கவிஞர் வைரமுத்து. அதே கவிஞரே "காதல் என்பது costly உறவு, பெண்கள் எல்லாம் ஆண்களின் செலவு" என இன்னுமொரு பாடலில் எழுதியுள்ளார். இந்தக் கவிஞர்களே இப்படித்தான். பிழைப்புக்காக எதையெதையோ இஷ்டத்துக்கு எழுதி விடுகிறார்கள். அதனால் இனியும் கவிஞர்ளை நம்பி No use. காதல் பற்றி உண்மைகளை அறிய சில youngestersஐ நெருங்க வேண்டும் என முடிவு செய்தேன். ஆண்கள் என்னும்..... கரைமேல் அழகிகள் என்றும்..... அலைமோதும் 'காதல் தேச'மாகிய



*"Credit card எல்லாம் கோவிந்தா; Cellularம், Carம் சம்பளத்தை விழுங்குது! இதில லவுஸ் வேற......"*

எங்கள் school தான் Best place என நினைத்து, அதை explore பண்ண முடிவு செய்தேன்.

Rrrrring! Rrrring!... Calculas(?) கண்விழித்துக்கொண்டே தூங்கிக் கொண்டிருந்த நான், bell கேட்டவுடன் சந்தோஷத்துடன் எழுந்து வெளியே பறந்தேன். காரணம் அது என் lunch period. Locker க்குள் booksஐ போட்டு விட்டு, அதில் ஒட்டியுள்ள Cindy crawford ஐ ஒருமுறை ஆசையுடன் பார்த்து விட்டு, ESL CorntroIஐ அடைந்தேன்.

அங்கிருந்து பாட்ஷா, மைக்கல் (புனைபெயர்) இருவருடன் Cafetaria வில் எங்கள் இளசுகளை Scan பண்ணினோம். மாட்டியவர் மாறன். ஒரு மூலையில் 'வாழ்வே மாயம்' கமலைப்போல் இருந்தவரை "Yo! whatz up, man" ................ T2 ஹீரோயின் போல பதிலைக் கொடுக்காமல் பயத்தோடு திரும்பினான். ஓ.....சிலவேளை, எங்கள் Fila உடுப்பையும் பீலா நடையையும் பார்த்து "போட" வந்துள்ளோம் என நினைத்து விட்டானோ? "How's life Guy?" என்றபடியே நாங்கள் அருகில் உட்கார, பயம் தெளிந்தவனாய், "என்னய்யா........ Life! எலலாம் இப்படியும் அப்படியும்தான்" அவன் குரலில் சோகம் கொஞ்சம் சேர்ந்திருந்தது.

"இந்த Joe Carter type தாடிக்கு ஏதும் கதையிருக்கா...... Buddy". "Shaving cream வாங்கக் காசில்லை" என்றவன் எங்கள் லொள்ளு அதிகரிக்கவே உண்மை வெளிவந்தது. "நான் love பன்ற girl எவனோ ஒருத்தனை விரும்புறாளாம்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆறுதலாக இருக்குமென்று எண்ணி "இந்த சின்ன விஷயத்துக்கா இந்தப் பெரிய தாடி............ முகத்தை தாடிக்குள் தேடித்தான் பிடிக்கவேண்டியிருக்கு" என்றான் பாட்ஷா. ஆனால் மாறன் கோபமாக எங்களை ஒரு பார்வை பார்த்துவிட்டு..... வைத்திருந்த புத்தகத்தைப் படிக்கத் தொடங்கினான். அவன் எங்களைக் 'கடி'க்காமல் போங்கடா என்று சொல்லாமல் சொல்லவே, "எல்லாம் வல்ல இறைவன் இந்த மானிடனுடைய சோகம் மறைந்து முகம் பொலிவு பெற அருள் புரிவாராக!" என்றபடி நகர்ந்தோம்.

Two steps எடுத்து வைக்க............நண்பர் Mr. Romeo, Design and tech class ல் இருந்து sneak out பண்ணி எங்களுடன் சங்கமமானார். Skip பண்ணுவது இவருக்கு கைவந்த கலை. அதில் இவர் Ph.d. நான் வெறும் OAC. நால்வரும் Cafeல் அமர்ந்து Bridge போடத்தொடங்கியபின் Mr. Romeoக்கு talk போட்டேன்.

"காதலாவது கத்தரிக்காயாவது! அடிக்கடி மாத்தி மாத்திக் கொண்டிருந்ததால் Mr. Romeo என்று பெயரும் கொடுத்துட்டீங்கடா! இனி எப்படி 'ஏதும்' நடக்கும்? வேற Schoolக்குத்தான் போகவேணும்". கொஞ்ச நேரத்திற்கு முதல் பார்த்த தாடிக்காரனையும், Mr. Romeoவையும் compare பண்ணி பார்த்து எனக்குள்ளேயே சிரித்துக்கொண்டேன்.

Bridge விளையாடிக்கொண்டிருக்கும் போது, பாட்டுக்குப் பெயர்போன சுதன், Coffee timeல் இருப்பதாக message வந்தது. உடனே நால்வரும் வெளியே விரைந்தோம். "Hi"யோடு கொஞ்சநேரம் பேசியபின் காதல் Subjectஐ Discussion க்கு கொண்டு வந்தேன். "டேய்...... Credit card எல்லாம் நாறிட்டு, Cellularம், carம் சம்பளத்தை விழுங்குது! இதில லவுஸ் வேற எண்டா! Subwayல் துண்டு விரிக்க வேண்டியதுதான்" என்றான் விரக்தியுடன். ஆகவே இவரைப் பொறுத்தவரையில் "காதல் என்பது costly

**"Love என்ற Holy Word"ஐ பழுதாக்கிறாங்கள். காதல் என்றா என்ன என்று உங்களுக்குத் தெரியுமா?" என்று கொட்டினார்.... "அடுத்த Monthல இருந்து உங்களிடம் Tuitionக்கு வருகிறோம்"**

உறவு" என்பது உண்மைதான். சுதனிடம் விடைபெற்றுக்கொண்டு மீண்டும் School க்கு வந்தோம்.

Boysஐ கேட்டது போதும்...... இது சாட்டா சில Girlsஐ நெருங்கினோம். Libraryல் seriousஆக Sidney Sheldonன் "Nothing lastes forever" படித்துக் கொண்டிருந்த Miss East York (நாங்கள் செல்லமாக அழைப்பது) தென்பட்டார். நெருங்கப் பயந்து கொஞ்ச தூரத்தில் நின்று கொண்டே பேச்சுக் கொடுத்தோம். கேள்வியைக் கேட்டவுடன் கொஞ்சம் அலுத்தவராய் (வேறு 'ஏதோ' எதிர்பார்த்தவர்போல்) தன் Opinion ஐ சொல்லத் தொடங்கினார். "Crazy people, இங்க சும்மா கண்டதயெல்லாம் காதல் என்று சொல்லி "Love என்ற Holy Word"ஐ பழுதாக்கிறாங்கள். காதல் என்றா என்ன என்று உங்ளுக்குத் தெரியுமா?" என்று கொட்டினார். அடுத்த Monthல இருந்து உங்களிடம் tutionக்கு வருகிறோம் என்று கிண்டலாகக் கூறிவிட்டு அங்கிருந்து நகர்ந்தோம்.

Libraryஐ விட்டு வெளியேற முற்படும்போது 'Homely girl' அர்ச்சனா எங்கள் கண்ணில் சிக்கினார். பார்க்க மகாலட்சுமி மாதிரி தோன்றிய இவரிடம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எப்படிக் கேட்பது என்று கொஞ்சம் Hesitation உடன் நெருங்கினோம்.

காதல் என்ற Wordஐக் கேட்டவுடனேயே "அய்யய்யோ.... இந்த மாதிரி கேள்வியெல்லாம் எனக்கிட்டக் கேட்காதிங்கோ" என்று சொல்லி கண்ணிமைக்கும் நேரத்தில் எங்களைக் காய் வெட்டிவிட்டார். இவர் கோயிலுக்குப் போகத்தான் சரி என்று எண்ணியபடி முக்கியமான இடங்களில் left out ஆக இருந்த Bell payphone இருக்கும் இடத்திற்குச் சென்றோம். தமிழ்ப் பெண்மணிகளால் கட்டாயம் Bell Canadaக்கு நல்ல லாபம் இருக்கும்.

"Telephone மணிபோல் சிரிப்பவள்" தான் மட்டும்தான் என்பதைக் காட்ட முந்தியவள்போல் busy ஆக யாருடனோ சிரித்து சிரித்து கதைத்துக் கொண்டிருந்தார்... சீதா! எப்படியாவது அவரின் கருத்தை எடுக்கக் காத்திருந்தோம். Telephone மணிபோல் கேட்ட அவள் சிரிப்பு சத்தத்தில் school மணியின் சத்தம் எனக்குக் கேட்கவில்லை. நண்பர்கள் என்னை சுயநினைவுக்கு கொண்டு வந்தபின் "Later" என்ற ஒரு வார்த்தையுடன் நால்வரும் பிரிந்தோம்.


**வானொலி நிகழ்ச்சிகள்**

**தமிழ்ச் சோலை**
AM 1320 KHz
ஞாயிறு காலை
9:00 - 10:00

**கனடிய தமிழ் ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்**
CTBC
24 மணிநேரமும் சிறப்பலைவரிசை மூலமாக ஒலிபரப்பாகிறது.

**றேடியோ ஏசியா**
சர்வதேச வானொலிச் சேவை
ஆசியா, ஐரோப்பிய நாடுகளுக்கு...

**தமிழர் குரல்**
1540 AM - 101.3 FM
செவ்வாய் - வெள்ளி
இரவு 11:00 - 11:30



**88.9 FM STEREO**
சனி - ஞாயிறு
காலை 7:00 மணி முதல்
காலை 8:00 மணி வரை



கீதவாணி
Geethavaani
Tel: 416 751 9077

**AM 1430 KHz**
சேவை ஒன்று
திங்கள் - வெள்ளி
இரவு 11:00 மணி முதல்
காலை 6:00 மணி வரை
சனி - ஞாயிறு
நள்ளிரவு 12:00 மணி முதல்
காலை 6:00 மணி வரை

சேவை இரண்டு
திங்கள் - வெள்ளி
காலை 11:00 மணி முதல்
நண்பகல் 12:00 மணி வரை

# நமது தீர்ப்பு




பாடசாலைக்கு வந்தோம்....
படிப்பதற்கு அன்றி
காதலிக்க அல்ல......!
உங்கள்
அழகில் விழுந்துவிட
விளக்கைச் சுற்றுகிற
விட்டில்கள் அல்ல...
நாங்கள்
செல்லும் பாதைகளில்
நீங்கள் நிற்க
சொல்லுகிறோமா எம்மைச்
சுற்றுகீறீர் என்று....

காரில் வந்து சுற்றுவது
உம்....
கண்வெட்டை வேண்டி அல்ல!
நேரில் எம்மைக் கண்டுவிட்டால்.....
நேர்நடைதான் மாறுவதேன்?
உதட்டுப் பூச்சதனால்
உள்ளங்கள் மாறிடுமா....?
மருட்டுப் பேச்சதனால்
மயங்கிடுமோ காளைமனம்
மனக்குருட்டு மனிதரல்ல
வெளிக்கோலத்தால் விழுந்துவிட
இருட்டில் கைவிளக்காய்
இருப்பவளே பெண் என்பேன்!

பொட்டு ஒன்றை வையுங்கள்
மங்களமாக....
அதை இட்டதற்கு எடுத்துரைப்பீர்
இனிதொரு விளக்கம்
எங்களது பண்பாடு
கலங்கரை விளக்கம்
என்றுரைக்க ஏனம்மா
இன்னும் தயக்கம்?

ஆணும் பெண்ணும்
காதல் கொள்ளல்
உலகில் வழக்கம்....!
அதை இடைநடுவில்
கைவிடுதல் என்ன ஒழுக்கம்?
பழகிவிடும் எம்மோடு
அன்பைக் கொடுத்து.....
இளகி விடும் இந்த மனம்
பண்பாய் நடக்கும்....!

அழகு கண்டு
வருவதல்ல காதல் பெண்ணே.....!
மனம் இரண்டின் சங்கமமே
காதல் என்பேன்!

**மட்டுவில்**
**நிர்மலன் பாலசிங்கம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### கலைந்துபோன கலாபம்

இப்போதெல்லாம் ரசிகர்கள் ரொம்பத் திருத்தம். ஆறுமணிக்கு நிகழ்ச்சி என்றால் ஆறுமணிக்கு ஆஜர்.
ஆனால் நிகழ்ச்சித் தயாரிப்பாளர்கள் (பேச்சாளர்களும் தான்) அதையும் கெடுத்துவிடுவார்கள் போலிருக்கு.
உதாரணம் கலாபமும்...........

வாவ் ....10 டொலர் டிக்கட்டுக்கு இவ்வளவு ரசிகர்களா? (கனக்க ஓஸி டிக்கட்டுகளாம்)
சரி...........
ஏன்...கலாபம் முதல் நாள் குழம்பியது? யார் காரணம்...?
இதெல்லாம் தேவைக்கப்பாற்பட்ட விடயம் இருந்தாலும்.........
"திட்டமிடல்" எனும் விடயத்தை முதலில் கற்றுக் கொள்வது(இனியாவது) எல்லோருக்கும் நல்லது.

நகரின் பிரபல்யமான பரதநாட்டியக் குழு (?) வினரின் நிகழ்ச்சிகள் அநேகமாக தூள்கிளப்பின.

ஓர் நடன நிகழ்வில் பிரதான பாத்திரத்தில் உள்ள கலைஞர் மட்டும் அபிநயம் செய்துகொண்டிருக்கும் போது ஏனையோர், தம்மை யாரும் கவனிக்கமாட்டார்கள் என்ற பாணியில் தமக்கிடையே சிரித்துக்கொள்வது அல்லது வேறு ஏதாவது செய்து கொண்டிருப்பது....சகிக்க முடியாமல் இருந்தது. (வசந்தா டானியல் கவனத்திற்கு)

பலத்த mic war இன் மத்தியில் விஜயலஷ்மி சீனிவாசகம் செவிக்கு விருந்தளித்தார்.
பாடுவதில் கவனம் செலுத்துவதா ...மைக் பிடிப்பதில் கவனம் செலுத்துவதா.......
அவரது நிலைமை கொடுமையிலும் கொடுமை.
எங்கே போனார்கள் ஒலியமைப்பாளர்கள் (extra மைக் இல்லையோ)
பாவம்..... விஜயலஷ்மி சீனிவாசகம் ஆழம் தெரியாமல் காலை விட்டுவிட்டார்.

மறுநாள் கலாபம் அமைதி. கே. எஸ். பாலச்சந்திரனின் நாடகம் not bad. "படிச்சு முடிஞ்சுது..இனி என்னப்பா செய்யிறது" "Mc Donalds இல் வேலை தேடலாம். இல்லாட்டி திரை இசை நடனம் ஆடப்போகலாம்."

சுப்பர் லீட்ஸ் இசை நிகழ்ச்சியில் இளமை எதிரொலித்தது. சுகல்லியா ரகுநாதன் What a voice.........

### அமாவாசைப் பொழுதுகள்

வித்தியாசமான கலைஞர், வீடியோ சஞ்சிகையாளன், மாற்றுத் தளத்திற்காக சிந்தித்தவன், சிறந்த விமர்சகன்.......
நிலா குகதாசன்.
இன்று இந்த மனிதர் எம்மிடையே இல்லை என்பதுதான் நிஜம். இந்த

மனிதருக்கு நாம் கொடுக்கும் சரியான அஞ்சலி என்ன........அவரது கருத்துக்களை "திரிபு" படுத்தாமல் சமுதாயத்திற்கு சென்றடைய வைப்பது......
ஆனால்....
என்ன நடந்தது..........
பாவம்......... அந்த மனிதர்.

## 1955இல் இப்படி ஒரு படம்

அண்மையில் Art Gallery Theatre இல் "ரே" யின் பதர்பாஞ்சாலி. அரங்கில் நிறைந்தவர்கள் யாவரும்..... வேற்றினத்தவர்கள் (எம்மைவிட). அதிசயமாக இருந்தது.

நாம் "அரசிளங் குமாரி" எடுத்துக் கொண்டிருந்த காலகட்டத்தில் "ரே" பதர்பாஞ்சாலியை எடுத்திருக்கிறார்....... இன்னும் நாம் அருணாச்சலம் எடுத்துக் கொண்டிருக்கிறோம்.

எமது நாளாந்த வாழ்வில் நாம் கவனிக்கத் தவறிய பல சின்னச் சின்ன நிகழ்வுகளை "ரே" மிக உன்னிப்பாக கவனத்திருப்பதுதான் அவரது Plus point.

ஒரு சிறுவன், சிறுமி, வறிய குடும்பம், சகோதரபாசம், நாய் இவர்களுடன் ஓர்.....குடு...குடு....பாட்டி.... (இந்தப்பாட்டி உண்மையாக இறப்பதற்கு ஓரிரு மாதங்களின் முன்னர்தான் "ரே" படமெடுத்திருப்பாரோ.......?) என்று நிஜத்தை செலுலைட் ஆக்கியிருக்கிறார்.

சேலை முடிச்சில் காசு முடித்து வைப்பது... மழைக்குள் படுத்திருந்த நாய் வீட்டிற்குள் வந்து உதறுவது. ஈ மொய்த்துக் கொண்டிருக்கும் சட்டியில் பாட்டி வழித்து வழித்து சாப்பிடுவது....
மழைவருவதற்கான அறிகுறிகள் காட்டுது என்று பல இடங்களில் பிரமிக்க வைத்துவிட்டார்.

ஒரு சம்பவத்தை "ரே" காட்ட முயலும்போது அதை நேரடியாக காட்டாது Sympolic ஆகக் காட்டுவது அவரது தனிச்சிறப்பு. உதாரணமாக வீடு பாழடைந்து போவதை பாம்பு நுழைவதாகக் காட்டுவது மகள் இறந்து போனதை பின்னர் தாயும் தந்தையும் சந்திக்கும் காட்சியில் காட்டுவது என்று ஆயிரம் ஆயிரம் விடயங்களை அந்த மனிதர் 55களில் சாதித்திருக்கிறார்.

ஒளிப்பதிவு..... அந்த புதிய ஒளிப்பதிவாளர் இயற்கையான ஒளியை மட்டும் பயன்படுத்தி நேர்த்தியாக செய்திருக்கிறார். சிறுவிளக்கின் ஒளியில் எடுக்கப்பட்ட அந்தக் காட்சியை மறக்க முடியவில்லை.

மணிரத்தினம், P.C. ஸ்ரீராம், ராஜீவ்மேனன் போன்ற பலர் "ரே"யின் பல யுத்திகளை இப்போது கையாள்வதை பல படங்களில் காணக்கூடியாத உள்ளது.

மௌனத்தை மிகவும் வலிமையான மொழியாக்கியவர்..... அன்று "ரே"...... அதன் கொப்பியாக மணி.......

## முகம்(கள்)

இந்திய பட சித்திரவதைகளை தொடர்ந்து பார்த்து வந்த எமக்கு சற்று திருப்தி. அண்மையில் முகம் பார்க்க கிடைத்தது. எமது தரமான சினிமா படைப்புக்களுக்கு இது ஓர் ஆரம்பமாக இருக்கும்.

பிடித்தவை
* யோகேஸ், ஆனந்தன் நடிப்பு
* இயல்பான நகைச்சுவை
* அருந்ததியின் இயக்கம்
* Re recording

இடித்தவை
* எங்கே முடியும் என்று தெரியாத நீண்டபடம்
* நிஜத்தை காட்டுவதற்குப் பதிலாக அதை உறுதிப்படுத்தப்போய் தொலைத்துவிட்ட தன்மை
* ஆனந்தனின் மௌனம் (over)
* உணர்வுகளை சுரண்டும் சென்டிமென்டல் காட்சிகள்
* இடையிடையே தலைகாட்டிய சினிமாத்தனம் (பாஸ்போட் கிழித்தல்) சரி........ அதை விடுங்கோ....அந்தப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதினம் தெரியுமோ?
"முகம்" ஆரம்பிக்கும் முன்னர் போட்ட... உள்ளத்தை அள்ளித்தாவின் ரம்பாவை பல முற்'போக்கு' வாதிகளுக்கு நல்லாய் பிடிச்சுப்போட்டாம்.

பல கடைகளில் அன்று மாலை அந்த ரம்பாவை காணக்கிடைக்கல்ல.
ரம்பா...பிஸியோ.....!

## ராமன் அப்துல்லா

உள்ளத்தை அள்ளித்தாவின் Super canon photo கொப்பி. (கதை). இருந்தாலும் பாலுமகேந்திராவின் காமரா.....வாவ்.

இல்லாமல் போனவை: கனவுக் காட்சிகள், ஆடம்பர செட்டுகள், மேக்கப் செலவுகள், ஆடைகள் (அட்டகாசமான) செயற்கையான ஒளி.....

எந்த இடத்திலும் செயற்கையான ஒளி பாவிக்கப்படவே இல்லை. அதுதானே பாலுவின் Plus point. பல இடங்களில் மியூசிக்கே போடாத இளையராஜாவின் Rerecording clean........!

குளிர்ச்சியான, பசுமையான ஊட்டியிலே வெளுத்து வாங்கிவிட்டார். அதுவும் அந்த பச்சை மலையில் சிவப்பு உடைகளின் combination தூள். கமராவுக்காக பார்க்கலாம்.

## 'ழ'கரம்

நான்கு மாதத்தில் மூன்று இதழ்கள்.
சாதனைதான்....
கைக்கடக்கமான விடயங்கள் பலவற்றை சாதாரண வாசகர்களுக்கு எடுத்து வந்திருக்கிறது.

இலக்கிய ஆர்வலர்களுக்கு களம் அமைத்துக் கொடுத்திருக்கிறது. (இன்று எமக்கு தேவையான விடயம்.)
முதிர்ந்த எழுத்தாளர்கள் பலரை எம்மிடையே திருப்பிக் கொண்டுவந்துள்ளது.
ஆனால்.... அதிகரித்துவரும் அந்த உள்ளூர்க் 'கடி'ப் பக்கங்களை பிரயோசனப்படுத்தலாம்.
செய்வார்களா...?

## Fire



தீபா மேத்தாவின் இயக்கத்தில் ஓர் ஆங்கிலப்படம். ஷபனா ஆஸ்மி, நந்தித்தா தாஸ் நடிப்பில்...
வழமையான இந்திய சினிமாவில் காணப்படாத, இந்தியாவில் காணப்படும் பாலியல் பிரச்சனைகள் காண்பிக்கப் பட்டிருக்கின்றன.

படம் 'லெஸ்பியனிசம்' தொடர்பானது.

இந்தியாவில் இருப்பதாக, இந்தியர்களால் நம்பப்படாத.... ஆனால் இருக்கும் விடயத்தை இயக்குனர் வெளிக் கொண்டுவந்திருக்கிறார். இதமான கமரா. பின்னணி இசையில் A.R. ரகுமான் (அட! நம்ம ரகுமான் தான்) முன்னேறியிருக்கிறார்.

## ஆட்டுவித்தால்.....

நம்மூர் பிரபலங்கள் பலர் அரச உடையில் (?) பாடல் காட்சிகளுக்கு ஆட்டம் போட்டிருக்கினமாம்.
ஆட்டுவிப்பதுதானே நம்ம முன்னணி இயக்குனரின் 'இயக்கம்' விடயங்களுடன் அடுத்த இதழில்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2000 நோக்கி

## கண் பார்த்து

அடடா!...Bank Cardஐ வீட்டில் மறந்துவிட்டு விட்டுச் சென்று விட்டீர்களா? அல்லது உங்கள் ID நம்பரை அடிக்கடி மறந்து விடுகிறீர்களா? இனித்தொல்லை விட்டது. நியூ ஜேர்சியிலிருக்கும் ஒரு நிறுவனம் உங்களுககாகவே புதிய ஒரு வழிமுறை யைக் கண்டுபிடித்திருக்கிறது. நீங்கள் Bank Mechineஐப் பார்த்ததுமே அது உங்களை யாரென்று இனங்கண்டு கொள்ளும். எப்படி...?



நீங்கள் Bank Mechine இருக்கும் இடத் தில் நுழைகிறீர்கள். மேலே பொருத்தப் பட்டிருக்கும் இரட்டைக் கமரா உடனடி யாகவே அசைந்து உங்கள் வலது, இடது கண்கள் இருக்கும் இடங்களை கண்டுகொள்கிறது. உங்கள் கண்மணி யின் வடிவத்தை தனது கம்பியூட்டரில் பதிவு செய்கிறது. கம்பியூட்டர் தன்னிடம் ஏற்கனவே பதிவிலுள்ள கண்மணி அமைப்புக் களுடன் உங்கள் கண்மணியின் வடிவத்தை சரிபார்க்கிறது. உங்களை யார் என்று கண்டு கொள்கிறது. இப்பொழுது நீங்கள் சேவையைப் பெற்றுக் கொள்ளலாம். (நீங்கள் ஏற்கனவே உங்கள் கண்மணி யின் வடிவத்தை வங்கியில் பதிவு செய்து வைத்திருக்கவேண்டும்.)

இந்த வகை முறையை "Irisldent" என்று அழைக்கிறார்கள். இதன்மூலம் இனி Bank Cardஓ அல்லது PIN நம்பரோ தேவையில்லை. 'Sensar Inc.' என்ற நிறு வனமே இந்த முறையை அறிமுகப்படுத்தி யிருக்கிறது. இந்த "Biometric identity' அடுத்த ஆண்டில் சில வங்கிகளால் பாவனைக்குவர இருக்கிறது. உலகில் இருவருக்கு ஒரேவகையான கண்மணி அமைப்பு இருப்பதில்லை. கைவிரல் அடையாளத்தை விடவும் இம்முறை பாது காப்பானதென இந்த நிறுவனம் கூறுகிறது.

சரி நீங்கள் Sunglass அல்லது Contctஐ அணிந்திருந்தால் என்ன நடக்கும்? பிரச்ச னையே கிடையாது. இங்கு பாவிக்கப் படும் கமரா அவற்றையெல்லாம் தாண்டிச் சென்று உங்கள் கண்ணை இனங்காணும். மேலும் கமரா கண்ணை Scan செய்ய 1அல்லது 2 செக்கன்களே போதுமானது. எனவே நீங்கள் சிறிது நேரம் அசையா மல் நிற்கவேண்டிய தேவையோ அல்லது நுணுக்குக் காட்டி போன்ற அமைப்பில் உங்கள் கண்ணை வைக்க வேண்டிய தேவையோ கிடையாது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமெரிக்க வங்கி ஒன்று இதனைப் பரீட் சார்த்தமாக நடைமுறைப்படுத்தியிருக்கிறது. அநேகமாக விரைவில் இங்கும் இம்முறை அறிமுகமாகலாம். விரைவில் 'கையடை யாளம்' என்ற சொல் மறைந்து 'கண்ண டையாளம்' என்ற சொல் தோன்றக்கூடும்.

## ❑ இன்னும் 832 நாட்களில்......

இன்னும் 832 நாட்களில் (நான் இதை எழுதுவதிலிருந்து) உங்கள் கம்பியூட்டர் முற்றிலும் 'கிராஷ்' ஆகலாம். இனி எப் போதும் மீள புரோகிராம் செய்யமுடியா மலே கூடப் போகலாம்.



ஏனெனில் பல கம்பியூட்டர்கள் ஒரு ஆண் டின் இறுதி இரண்டு இலக்கங்களை மாத்திரமே அடையாளம் காணக் கூடிய வகையிலுள்ளன. (உதாரணமாக 1997ஐ 97 என்றே வாசிக்கும்). 1999 முடியும்போது அடுத்த ஆண்டை இவை '00' என்று வாசிக்கும் அல்லது '1900'ஆக எண்ணிக் கொள்ளும். மீண்டும் பழைய ஆண்டே திரும்ப வருவதால் கணிப்பில் சிக்கலாகி கிராஷாகலாம் என எதிர்பார்க்கிறார்கள். இச்சிக்கலை விஞ்ஞானிகள் 'Mellennium bug' என அழைக்கிறார்கள்.

கனடிய அரசு இந்த வகையான சிக்கலை அரச நிறுவனங்களிலும் ஏனைய தனியார் நிறுவனங்களிலும் நிவர்த்தி செய்ய எண்ணியுள்ளது. கைத்தொழில் அமைச்சர் ஜோண் மலோனியின் அனுசரணையுடன் 'Year 2000 Task Force' என்ற அமைப்பு தாபிக்கப்பட்டுள்ளது.


பல தனியார் நிறுவனங்கள் இச்சிக்கலை ஏற்கனவே எதிர்கொள்ளத் தயாராகி விட்டன. எனினும் இந்த Task Force அமைப்பு உதவி தேவைப்படும் நிறுவனங் களுக்கு தேவையான ஆலோசனைகளை வழங்குவதுடன் புரோகிராம்களை மாற்றிய மைக்கவும் உதவுமாம். ஏறக்குறைய 50 பில்லியன் டொலர் இச்சிக்கலால் செலவா கலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

## ❑ ஒரு லீற்றரில் 25 கிலோமீற்றர்

ஒரு தடவை Full tank பெற்றோலுடன் 1000 km பயணம் செய்யலாமா? எங்களில் பலருடைய கனவு இதான். Ford நிறுவ னத்தின் கருத்துப்படி இது விரைவில் நன வாகும். Ford நிறுவனம் விரைவில் P2000 என்ற காரை அறிமுகம் செய்யவுள்ளது.

இவ் அசாதாரண வடிவமுடைய P2000 மிகக்குறைந்த எரிபொருளையே பாவிக்கப் போகிறது. இயந்திர வடிவமைப்பில் வித்தி யாசப்பட்டிருப்பதும், மிகக்குறைந்த நிறை யுமே இந்த 'குறைந்த விலைப்பயணத்தை' சாத்தியமாக்கப்போகின்றன.

சாதாரண 1997 Ford Taurus இன் நிறை 3318 lbs. புதிய P2000இன் நிறை 2000 lbs.ஆக இருக்கப் போகிறது. எப்படி இந்த நிறைக் குறைப்பு சாத்தியமாகிறது? வழ



மையான உலோகங்களுக்குப் பதிலாக அலுமினியம், மகனிசியம், காபன் பைபர் என்பன பயன்படுத்தப்பட்டுள்ளன. இன்னும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏனைய கார்களை விட மிகக்குறைந்த சத்தமுடையதாகவும் அதிர்வுடையதா கவுமே இது இருக்கப்போகிறது. இந்த வருடம் இலையுதிர்காலத்தில் பரீட்சார்த்த மாக சில இடங்களில் அறிமுகப்படுத்தப் படவிருக்கும் இது 2000க்கு பின்னரே விற்பனைக்கு வரவிருக்கிறது.

## ❑ Parking meterகளுக்கு கண் முளைத்தால்.....

அவசரமாக Downtownக்கு செல்கிறீர்கள். மீற்றருடனான Parking Spaceஐ கண்டுபிடித்து விட்டீர்கள். திரும்ப வரும்போது meter Expired ஆகி நீண்டநேரமாகி இருந்தது. நல்லவேளையாக மஞ்சள் நிறத் துண்டேதும் உங்கள் வைப்பருக்கு அடியில் இல்லை. இப்படி



சிலவேளைகளில் உங்களுக்கு நடந்திருக் கலாம். இப்படி பலர் குறைந்த தொகை யில் நீண்டநேரம் வாகனங்களை நிறுத்து வதால் மாநகரசபைகள் ஏராளமான பணத்தை வருடாவருடம் இழந்து வருகிறதாம்.

Parksmart என்ற நிறுவனம் ஒரு புதுவகை மீற்றரை அறிமுகம் செய்துள்ளது. இப்புது வகை மீற்றரில் ஒரு சென்சர் பொருத்தப் பட்டிருக்கும். நீங்கள் உங்கள் வாக னத்தை மீற்றரின் முன் நிறுத்தியவுடன் சென்சர், வாகனம் ஒன்று நிறுத்தப்பட்டு விட்டது என்பதைக் கண்டு கொள்ளும். உடனடியாக மத்திய நிலையத்திற்கு அறிவிக்கும். நீங்கள் பணம் போடாமல் விட்டால் அல்லது நீங்கள் செலுத்திய பணம் முடிவடைந்து விட்டால் கம்பியூட்ட ரொன்று உடனடியாக Parking அதிகாரி யொருவருக்கு தெரியப்படுத்தும். அப்புற மென்ன நீங்கள் அம்போதான். இந்த முறைமூலம் அமெரிக்காவில் மாத்திரம் பத்து பில்லியன் டொலர்களை வருடாந் தம் சேகரிக்கலாம் என இந்நிறுவனம் கூறுகிறது.

அது மட்டுமா? Parking Meterக்கு போட உங்களிடம் Coin இல்லை. கவலையே இல்லை. உங்களிடம் Visa, MasterCard ஏதாவது இருக்கிறதா? இழுத்துவிட்டுச் செல்லவேண்டியது தான். மீற்றர் தானா கவே பணத்தை உறிஞ்சிக்கொள்ளும். அடிக்கடி -40° C குளிரில் வெளியே வந்து சில்லறை போடும் தொல்லையும் இனித் தொலைந்தது.

அமெரிக்காவிலுள்ள சில நகரங்கள் இம்முறையை பரீட்சார்த்தமாக அறிமுகப் படுத்த விருப்பம் தெரிவித்துள்ளன. வெற்றிபெறுமாயின் இங்கும் நடைமுறைக்கு வரலாம். அப்புறமென்ன..... "பொதுவா வைக்கிறதில்லை.... சிலவேளைதான் வைக்கிறவங்கள்" என்ற பேச்சுக்கே இடமில்லை.

## ❑ 'வலை' படம்

கனடாவிலுள்ள ஒருவருக்கு திருமணம் நடக்கிறது. அவருடைய சகோதரர் இங்கி-லாந்தில் வசித்து வருகிறார். திருமணப் புகைப்படத்தை உடனேயே பார்க்க அவ ருக்கு ஆசை. என்ன செய்யலாம். Blacks நிறுவனம் உங்களுக்காக ஒரு சேவையை அறிமுகம் செய்கிறது.

படம் எடுத்து முடிந்ததும் பிலிம்ரோலை Blacksஇல் கொடுத்துவிடுங்கள். உங்கள் படம் இன்ரர் நெற்றில் வரவிரும்புவதாகக் கூறுங்கள். படம் கழுவி வந்ததும் இன்ரர்-நெற்றில் படம் பதிவு செய்யப்பட்டிருக்கும். இந்நிறுவனம் உங்களுக்கு ஒரு Passwordஐத் தரும். அதை இங்கிலாந்திலுள்ள சகோ தரருக்கு தெரியப்படுத்தினால் அவர் Blacksஇன் Websiteஇல் சரியான Pass-wordஐத் தர படங்களைப் பார்க்கலாம்.

உங்களிடம் இன்ரர்நெற் இருக்கவேண்டிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# CHIPS
## கொறிக்க...

ஒரு மந்தமான மாாலைப் பொழுது........ நண்பர் ஒருவருடன் தமிழ் ரெஸ்ரோரன்ற் ஒன்றுக்கு சாப்பிட (தண்ணியடிக்கவும் தான்) செல்கிறேன். கதவைத் திறந்து உள்ளே நுழைந்தபோது 'ஆஹா' இனிமையான இசை மெலிதாக காற்றோடு கலந்துகொண்டிருந்தது. மங்கிய ஒளியில் அந்த உணவகம் "Romantic Moode" ஐ ஏற்படுத்திக் கொண்டிருந்தது. வந்தது தமிழ் ரெஸ்ரோரன்ற் தானா என்று உறுதிப்படுத்திக் கொண்டு Kenny G யின் சுகமான அந்த Saxophone இசையை அனுபவித்துக் கொண்டிருந்தேன்.

"இது எப்படி" என்று வியந்தபடி பார்த்தபோது அட! அதுதானே! வேற்றினத்தவர் சிலர் அங்கிருப்பதைக் காணமுடிந்தது. அந்த இனிமையான சூழலில் நண்பருடன் கதைத்த படியே சிறுது நேரம் கழிந்தது.

தீடீரென பிரகாசமான ஒளி உணவகம் முழுவதையும் ஆக்கிரமித்தது. வியந்தபடி திரும்பியபோது

"அதாண்டா இதாண்டா ...........
அருணாசலம் நான்தாண்டா....."

காதைப் பிளந்தது. புரியாமல் பார்த்தபோது புரிந்தது..... வேற்றினத்தவர்கள் சென்றுவிட்டார்கள் என்று.

பொதுவாக ரெஸ்ரோரன்றுக்கு எதற்காக செல்வார்கள்?....பாட்டுக் கேட்கவா என்ன? ஒரு இனிய மாலையை தமது Partner உடன் அமைதியான சூழலில் அளவளாவியபடி கழிப்பதற்கே..அருணாச்சலம் பாடலைக் கேட்பதற்காக அல்ல. வேறு சில உணவகங்களில் இனந்தெரியாத நடிகையை பிரமலமான ஒரு நடிகர் துரத்திக் கொண்டிருப்பார்.... பாரிய ஒரு ரீ.வி திரையில் இந்த கமராக் கொப்பிகளின் சித்திரவதைகளை எல்லாம் அனுபவித்தே சாப்பிட வேண்டும் என்று விதித்திருக்கிறார்கள். நம்மவர்களுக்கு எதையும் சசசசசத்தமாகக் கேட்டே பழகிவிட்டதோ?

போகிற போக்கில் பார்த்தால் இலங்கையில் மாதிரி வெளியேயும் இரண்டு ஸ்பீக்கர்கள் வைத்து அருணாச்சலத்தை போட்டாலும் போடுவார்கள். இது எங்கு போய் முடியுமோ?

!!!!!!!!!!!!!!!!!!!!


**உங்களிடமிருந்து ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றன.**

**Fax: 416 425 2625**


## 2000 நோக்கி

53ம் பக்கத் தொடர்ச்சி

தேவையோ அல்லது உங்களுக்கு இன்ரர்நெற் பற்றிய அறிவோ தேவையில்லை. இங்கிலாந்தில் இருப்பவரிடம் மாத்திரம் இன்ரர்நெற் இருந்தால் போதுமானது. நீங்கள் சரியான Passwordஐ கொடுத்தால் அன்றி வேறெவரும் படத்தைப் பார்க்க முடியாது. www.blackphoto.com என்ற முகவரியில் மேலதிக விபரங்கள் கிடைக்கும்.

• அமிர்தவர்ஷனி



Pillayar Traders



உங்கள்
அனைத்துத்
தேவைகளையும்
ஒரே இடத்தில் பூர்த்தி
செய்து கொள்ள நாடுங்கள்

**பிள்ளையார் டிரேடர்ஸ்**

Tel: (416) 438-7746

3060 Lawrence Av.E.,
Scarborough, ON
(Lawrence/Markham)

## AUTO MECHANIC SHOP

உங்களின் சகல
விதமான திருத்த
வேலைகளுக்கும்
எம்மை நாடுங்கள்.

*Tune-up, Brakes*
*Transmission & Engines Rebuilt*
*Air-Condition*
*Body Work*

Domestic, European & Japanese
Car & Vans
we are specialized in
**HONDA**

S. Ruban
**(416) 299-0452**



***IRIE***
***CA SERVICES***



86 Melford Dr., Unit 14
Scarborough, ON





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**PORTELLO**
**So Soya**

**BAY HILL IMPEX LTD. இன்**
**மற்றுமொரு சிறந்த தயாரிப்பு**

# சுத்தமான நல்லெண்ணை




**B.H.I. இன்**
**நல்லெண்ணை**
**100% சுத்தமான**
**நல்ல எண்ணை!**

Most Sesame Oil
Aren't Cold Pressed
And Uses Heat To
Extract Oil Which
Often Damages the
Aroma Of The Oil.

70 Weybright Court, Unit 6, Scarborough, ON
**Tel: (416) 293-6555**
Visit us on www. portello. com. or e.mail @ portello. com

# alian problem

அண்மையில் வெளியான "Men In Black" திரைப்படத்தில் ஏலியன்கள் (வெளிக்கிரக வாசிகள்) பலர் பூமியில் வந்து தங்கியிருப்பதாகக் காண்பிக்கப் பட்டது. தமது கிரகங்களில் நடந்த அசம் பாவிதங்களைத் தொடர்ந்து இவர்கள் பூமிக்குத் தப்பி வந்ததாயும், பூமியில் தஞ்சம் கோரிய இவர்களை அமெரிக்க அரசு மனித உருவுக்கு மாற்றி மக்களோடு மக்களாக பூமியில் வாழ வைத்திருப்ப தாயும் சொல்லப்பட்டது. ஏனைய மக்கள் அச்சமடையலாம் என்பதால் இவர்கள் ஏலியன்கள் என்ற விபரம் வெளியே தெரிவிக்கப்படவில்லை. இவர்கள் வெளிக் கிரகத்தைச் சேர்ந்தவர்கள் என்பதால் எல்லாவகையிலும் இவர்கள் மனிதர்களை ஒத்திருக்க மாட்டார்கள் என்பதாயும் சொல்லப்பட்டது. சில்வஸ்ரர் ஸ்டலோன், Basketball Super Star டெனிஸ் ரொட்மன் போன்றவர்களும் இந்த ஏலியன் வகை யைச் சேர்ந்தவர்களாம். எமக்கு மேலும் கிடைத்த சில ஏலியன்கள் பற்றிய தகவல்கள்.

## T. ராஜேந்தர்

இவர் "எதுகா-மோனா" கிரகத்தைச் சேர்ந்தவர். அங்கு நடந்த அரசியல் சதி யொன்றின் பின் தப்பி பூமியில் தஞ்ச மடைந்தவர். அதிகமாகப் பேசிக்கொண்டி ருந்ததால் தமிழகத்துக்கு அனுப்பப்பட்டார். தனது சொந்தக் கிரகத்தில் "டப்பாங்கூத்து" பாடுவதில் பிரபலமாயிருந்தவர். இவரது முகத்தில் ஏலியன் அடையாளங்கள்



நிறையவே இருந்ததால் முடியை வைத்து மறைத்திருக்கிறார்கள்.

## சுப்ரமணிய சுவாமி



"கோமாளியா" கிரகத்திலிருந்து வந்தவர். அங்கு அறிக்கைகள் விடும் அமைச்சிற்கு அண்மையிலிருந்த சர்க்கஸ் ஒன்றில் பபூனாக வேலை பார்த்தவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ராமராஜன்**



"கிராமா" கிரகத்திலிருந்து வந்தவர். பூமியில் வெப்பநிலை வேறுபாடுகாரண மாக நிறைய உடைகள் அணிவார் (கிராமத்து வயலில் வேலைசெய்யும் போதும் கோட், ரை அணிந்திருப்பார்). இந்தக் கிரகத்தைச்சேர்ந்தவர்களுக்கு 'Bright'ஆன வர்ணங்கள் மாத்திரமே கண்ணுக்குத் தெரியுமாம்.

**வாலி**

முதலில் இவர் சாதாரண மனிதராகத்தான் இருந்தார். இடையே சில காலத்திற்கு முன்னர் 'லிவா" கிரகத்திலிருந்து வந்த ஏலியன் இவரது உடலில் புகுந்து வாழ்ந்து வருகிறதாம். 'சக்கரை வள்ளிக் கிழங்கு' எழுதியதெல்லாம் அதற்குப் பிற்பாடுதான். ஏலியனாக இருப்பால் தமிழுக்கும், ஆங்கிலத்துக்கும் இடையே யான வேறுபாட்டைக் கண்டறியமுடியாத நிலை இருந்து வருகிறதாம்.

**ரம்பா**

இவர் அண்மையில் "கிளாமரா" கிரகத்தி லிருந்து வந்தவர். இவரது கிரகத்தில் வெப்பநிலை மிகவும் குறைவாகையால்



Ooops! Sorry...

இங்கு குறைவான உடைகளையே அணிவார். நடிப்பதைத் தவிர்ந்த ஏனைய துறைகளில் பிரகாசிக்கிறார்.

• சிந்தியா

உங்கள் அனைத்துத் தேவைகளையும்
பூர்த்தி செய்து கொள்ள நாடுங்கள்

*1670 Victoria Park Ave.,*
*Toronto, Ont.*
*Tel: (416) 757-1091*

PRINCESS PLAZA வில்
துவாரகாஸ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# YARLTON



2104 Bridletowne Circle
Finch & Warden
**Tel: (416) 494-9494**


**இலங்கை, இந்திய, கனடிய**
**உணவுப் பொருட்கள்**

**மரக்கறி வகைகள்**

**இறைச்சி, கடலுணவு வகைகளுக்கும்**

# யாழ்ரன்

# ஜெமினி மார்க்கட்



இலங்கை, இந்திய, கனடிய உணவுப் பொருட்கள்
பால், பழம், மரக்கறி வகைகள்

இறைச்சி, கடலுணவு வகைகள்

**மாதந்தோறும் மலிவு விற்பனை!** **விஜயம் செய்து பாருங்கள்!**


# Gemini Market

3230 Eglinton Ave. East, (at Markham) Scarborough, ON
**Tel: (416) 265 1010**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முதலாவது ஆண்டு பூர்த்தியில்.....



**கனடாவில்
முதன் முதலில்
தலைவாழையில்
விருந்து
படைத்தவர்கள்!**

# கிராமத்து விருந்து

**603 Kennedy Road, Scarborough, ON**

**Tel: 416-266-4240**

*விருந்தெல்லாம் விருந்தாகுமா - அது
கிராமத்து விருந்துக்கு ஈடாகுமா?!*



*முதலாவது ஆண்டு
பூர்த்தியை முன்னிட்டு
அனைத்து விருந்துகளும்
மிக மலிவுவிலையில்.....*




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

INTERNATIONAL INSURANCE / FINANCIAL SERVICES

&

BST INSURANCE BROKERS

சர்வதேச காப்புறுதி + நிதிச்சேவை



A.VELUPPILLAI (Vel)

(Life Consultant & Insurance Broker)

காப்புறுதி ஆலோசகர்

கனடாவில் 11 வருட காப்புறுதி அனுபவம் சகல காப்புறுதி விளக்கங்களும் தமிழில் வழங்கப்படும்.

ELEVEN CONTINUOUS YEARS IN CANADIAN INSURANCE INDUSTRY

Life Section - Under International Insurance

Property Section- Under BST Insurance

*ஆயுள் காப்புறுதி

*வீடு

*வாகனம்

*வியாபார நிலையங்கள்

*சுகாதாரம்

*கல்வி

எம்மால் சகல வித காப்புறுதிகளும், உலகில் சிறந்த காப்புறுதி ஸ்தாபனங்களில் நியாயமான விலையில் உத்தரவாதத்துடன், உங்கள் விருப்பத்திற்கமைய, உங்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யத்தக்க வண்ணம் ஒழுங்கு செய்து வழங்கப்படும்.

ஆயுள் காப்புறுதி விசேட ஆலோசனைகள் உண்டு.

அழையுங்கள்:

Tel: (416) 499-9596

Fax: (416) 499-9382

2190 Warden Ave., Suite. 203,
Scarborough, ON. M1T 1V6



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ROJAH A Monthly Tamil Magazine ISSN 1206-6303

எல்லா அச்சுவேலைகளுக்கு

# SHANKAR PRINT

60 Barbados Blvd, Unit 6, Scarborough, ON. M1J 1K9
**Tel: (416) 269-1994 Fax: (416) 269-2135**

விவேகா அச்சகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

TCC &L KRISHOTH TYPESETTING 416-425-2884